Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | பங்குனி-13 | 26-03-2005 | சனிக்கிழமை | ஓசை 36




## ஆக்கிரமிக்கப்பட்ட சொந்த நிலங்களை விடுத்து

# மாற்றுக் காணிகளில் குடியேறுவதற்கு

# இடம்பெயர்ந்த மக்கள் தயாரில்லை!

### இடம் பெயர்ந்தோர் நலன்புரி அமைப்புக்களின் இணையம் அறிவிப்பு

**அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாகப் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள மக்கள் எக்காரணம் கொண்டும் அரசினால் வழங்கப்படும் மாற்றுக் காணிகளில் குடியேறத் தயாராக இல்லையென இடம் பெயர்ந்தோர் நலன்புரி அமைப்புக்களின் இணையம் அறிவித்துள்ளது.**

கொழும்பில் உயர் நீதிமன்றில் இடம்பெற்று வரும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான வழக்கு விசாரணைகளின்போது உயர் பாதுகாப்பு வலயம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களிற்கு வெளியே உள்ள அரசு காணிகளை மாற்றீடாக வழங்க முடியுமா? என உயர் நீதிமன்று யாழ். மாவட்ட செயலரிடம் அறிக்கையொன்றை தற்போது கோரியுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிரனைட் வெடித்ததில் இளைஞர் ஒருவர் மரணம்

(கொழும்பு)

சிவனொளிபாதமலை பொலிஸ் சோதனைச் சாவடியில் கிரனைட் ஒன்று வெடித்ததில் இளைஞர் ஒருவர் பலியானதுடன் இருபொலிசார் காயமடைந்தனர். நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் நடந்த இச்சம்பவத்தின் போது பதனல்ல பொலிஸ் சோதனைச் சாவடியில் பக்தர்களின் பயணப்பொதிகளை சோதனையிட்ட வேளை மேற்படி இளைஞர் கிரனைட்டை வெடிக்க வைத்ததாகப் பொலிசார் கூறியுள்ளனர். இதனால் அந்த இளைஞர் அவ்விடத்திலேயே பலியானதுடன், அருகில் நின்ற இரு பொலிசார் காயமடைந்துள்ளதாகவும் பொலிசார் கூறினர்.

# புலிகளுக்கும்- அரசாங்கத்திற்குமிடையில் உடனழப் பேச்சுக்கள் சாத்தியமில்லை

### வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சு வார்த்தை கள் உடனடியாக ஆரம்பிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் எதுவும் இல்லையென இலங்கை வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

பிரிட்டனுக்கு ஒருவார காலமாக பயணம் மேற்கொண்டு விட்டு நாடு திரும்பிய இவர் கொழும்பில் உள்ள வெளி நாட்டு பத்திரிகையாளர் சங்கத்தினருடனான இரவு விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், சமாதானப் பேச்சுக்களை அண்மையில் ஏற்பட்ட சுனாமி இயற்கை அழிவு முந்திக் கொண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.கொம்மாந்துறையில் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

மட்டக்களப்பு கொம்மாந்துறையில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதில் துப்பாக்கி சூட்டுக்கு உள்ளானவர் காயங்களுடன் தப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர் மீது 9 எம். எம். துப்பாக்கி மூலம் தாக்குதலை மேற்கொண்டவர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். துப்பாக்கி சூட்டுக்கு உள்ளானவர் ஆயுதக்குழு ஒன்றுடன் தொடர்பு கொண்டவரெனத் தெரிவிக்கப்படுகிறது. (32)

## சீனப்பிரதமர் ஏப்ரலில் சிறிலங்காவுக்கு விஜயம்

சீனப் பிரதமர் வென் ஜியாபோ எதிர் வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

இங்கு அவர் 12 ஆம் திகதி வரை தங்கியிருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது அவர் இலங்கை சனாதிபதி உட்பட உயர்மட்ட அரசியல்வாதிகளைச் சந்திக்கவுள்ளார்.அத்துடன் நுரைச்சோலை அனல் மின்மையத்தினை அமைக்கும் திட்டத்திலும் அவர் கைச்சாத்திடவுள்ளார். (32)

## எகிப்தின் செங்கடல் எல்லைப் பகுதியில் 137 இலங்கையர்கள் அநாதரவான நிலையில்

எகிப்தின் செங்கடல் எல்லைப்பகுதியில் தம்மை இலங்கையர்கள் என்று கூறியுள்ள 137 பேர் அநாதரவான நிலையில் இருப்பதாக ஹெய்ரோவிலுள்ள சிறிலங்கா தூதரகத்திற்கு எகிப்து அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இவர்கள் தங்கியிருக்கின்ற பகுதி ஹெய்ரோவிலிருந்து சுமார் 500 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் அமைந்துள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைய ஹெய்ரோவில் உள்ள சிறிலங்காத்தூதரக அதிகாரிகள் இவர்கள் தொடர்பான மேலதிக விபரங்களைத் திரட்டுவதற்காகச் சென்றுள்ளனர். இவர்கள் இலங்கைக் குடிமக்களா என்பது குறித்தும் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புத்தர் சிலை தகர்ப்பு விசாரணைக்கு உ த்தரவு

தென்னிலங்கையில் தொலைக்காட்சி நாடகம் ஒன்றின் படப்பிடிப்பிற்காக அமைக்கப்பட்ட புத்தர் சிலை ஒன்று தகர்க்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றன. பௌத்த சாசன அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இது தொடர்பில் உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இதனடிப்படையில் நாடகத் தயாரிப்பாளர். மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளார் .(32)

# ஓட்டுமடம் இராணுவக் காவலரணை அகற்ற மனித உரிமைக் குழுவிடம் மனு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அண்டியுள்ள ஓட்டுமடம் சந்தியில் இருக்கும் இராணுவக்காவலரணை அங்கிருந்து அகற்றுமாறு கோரி அப்பகுதி வாசி ஒருவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி காவலரணானது குடியிருப்புக்களின் மத்தியிலும், மக்கள் நடமாட்டம் அதிகமான இடமுமாகிய ஓட்டுமடம் சந்தியில் நிறுவப்பட்டுள்ளமை அப்பகுதி மக்களின் இயல்பு 'வாழ்விற்குப் பெரும் இடையூறாக இருப்பதாகச் சுட்டிக்காட்டி அதனை அகற்றுமாறு அப்பகுதி மக்கள் இராணுவ தலைமையகத்திடம் பல தடவை முறையிட்டும் எதுவித பலனும் அளிக்காத நிலையிலேயே அப்பகுதி வாசி ஒருவர் இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளார். (33)

## சர்வசன வாக்கெடுப்பு எதுவும் உடனடியாக நடத்தப்படமாட்டாது

### ஆளும் கட்சி பா.உ விஜயதாஸராஜபக்ஸ

(கொழும்பு)

சர்வசன வாக்கெடுப்பு எதுவும் உடனடியாக நாட்டில் நடத்தப்படமாட்டாது என பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியே இது தொடர்பாகப் பேசி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி அடுத்து ஆட்சியைக் கைப்பற்றும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது.எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியை எவராலும் கவிழ்க்க முடியாது என அவர் தெரிவித்தார். (32)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் குறித்து

# கடற்றொழில் நீரியியல் வளத்துறை அமைச்சில் கூட்டம்

தாயகக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் இந்திய மீன்பிடிப் படகுகள் தொடர்பாக நாளை மறுதினம் கொழும்பு கடற்றொழில் நீரியியல் வளத்துறை அமைச்சில் கேட்போர் கூடத்தில் காலை 10.00 மணிக்கு கூட்டம் இடம் பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இந்திய மீனவர்களின் மீன்பிடிப் படகுகள் அத்துமீறல இந்தியாவிலிருந்து அகதிகளை ஏற்றி வந்து தனிமையாக மணற்திட்டியில் இறக்கி விடுதல் போன்ற விடயங்களும் கலந்தாலோசிக்கப் படவுள்ளது. இக் கூட்டத்திற்கு மன்னார் மாவட்ட அரச அதிபர் கடற்றொழில் அதிகாரி, மீனவர் சங்க பிரதிநிதிகள், கடற்படையினர், இந்திய மீன்பிடிச் சங்கப் பிரதிநிதிகள், இந்திய கடற்றொழில் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்வர்.

## பல்லவராயன் கட்டுப் பகுதியில்

## சோழநிலா முன்பள்ளி திறப்பு

முழங்காவில் பிரதேச பல்லவராயன்கட்டு கிராமசேவையாளர் பிரிவில் சோழநிலா குடியிருப்பில் கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனத்தால் சோழநிலா முன்பள்ளி புதிதாக கடந்த 12ஆம் திகதி திறந்து வைக்கப் பட்டது.



மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கேற்றலைத்தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை பிரதேசப்பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றிவைத்தார். தமிழர் புனர்வாழ்வுக்கழகக்கொடியை பூநகரி முழங்காவில் அ.நி. இணைப்பாளர் பொ.சிவசாமியும், கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனக் கொடியை நிறுவன இணைப்பாளர் தி.வசீகரனும் ஏற்றி வைத்தனர்.

கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனத்தலைவர் செபமாலை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக முன்பள்ளி அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் எஸ்.பாண்டியன் முன்னபள்ளியைத் திறந்துவைத்தார். 1964 இல் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி குடியிருப்பு கிராமத்தில் இம் முன்பள்ளி தமிழர் புனர்வாழ்வுக்கழகம், அரச செயலகம், கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் மக்களின் பங்களிப்புடனும் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கண்டெடுப்பு

இல : 320, 3ஆம் குறுக்குத் தெரு,பருத்தித்துறைஅல்லது இல: 33 வின்சன் வீதி, இரத்தினபுரம், கிளிநொச்சி என்ற முகவரியைச் சேர்ந்த குருபாதம் அருளானந்தம் என்பவரது தேசிய அடையாள அட்டையும், போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு பயண அனுமதி அட்டையும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் யாழ். ஈழநாதம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். (சு)

## சாவு அறிவித்தல்

### செல்லத்துரை செல்லம்மா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உதயநகர் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லத்துரை செல்லம்மா 25.03.2005 நேற்றுக்காலமானர். அன்னார் வேலுப்பிள்ளை மீனாட்சியின் அன்பு மகளும், ராமசாமி நாகம்மாவின் மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், கனகலிங்கம் (ஜேர்மன்), காலஞ்சென்ற நாகராசா, திருநாவுக்கரசு (திருநா உணவகம், உதயநகர்), காலஞ்சென்ற திருமேனிப்பிள்ளை மாம்பழம், சுபாரத்தினம்(கனடா), பரமநாதன் (கனடா), காலஞ்சென்ற தேவராணி ஆகியோரின் அன்புத் தாயாரும். யோகலிங்கம், காலஞ்சென்ற கமலநாதன், அன்னமுத்து, தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும். சரோஜினிதேவி(கனடா), பாக்கியலட்சுமி(சுவிஸ்), நவமணிகாந்தி, இமயபாலன்(பசுபதி களஞ்சியம்), ரஞ்சனா(கனடா), ஜசோதா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும். லலிதலோஜினி(லண்டன்), தமிழரசி(கனடா), தமிழ்லோஜினி (ஜேர்மன்), தவரூபன், தவசீலன், சுதா(சுவிஸ்), சுஜாத்தா (சுவிஸ்), சுகிர்தா(சுவிஸ்), கோகிலதாஸ், தேவதாஸ், தர்மதாஸ், ஜெகதாஸ், குகதாஸ், விக்கினேஸ்வரன்(சுவிஸ்), ராகினி (கனடா), கமலினி (பசுபதி களஞ்சியம்), சுரேஸ், தர்சினி (கனடா), நவனீ தன் (கனடா), நிவேதா(கனடா), துசான் (கனடா), ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். 26.03.2005 சனிக்கிழமை பி.ப 01.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து பூதவுடல் இறுதி கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(5890)

## ௯௦ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 18 03 1935





மலர்வு 18 06 1976

அமரா
செல்லக்கண்டு - தங்கமணி

திருமதி
ஜெயசுகன் சிவமதி(மதி)
(சட்டவாளர் மாவட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், கிளிநொச்சி)

உதிர்வு 26 12 2004

26. 12. 2004 அன்று ஆழிப்பேரலையின் கோரப்பிடியினால் எம்மை விட்டுப் பிரிந்த எமது உறவுகளின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 26.03.2005 சனிக்கிழமை எமது தற்காலிக இல்லத்தில் நடை பெறவுள்ளது. இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

த.முகவரி:-
தம்பகாமம், பளை.

நி.முகவரி
வேம்படி, உடுத்துறை,
மருதங்கேணி.

தகவல்:-
குடும்பத்தினர்.

## சாவு அறிவித்தல்



### செல்லத்துரை இராஜேஸ்வரி

இல:29, லிங்கநகர் திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், இந்தியாவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராஜேஸ்வரி 24.03.2005 இல் இந்தியாவில் சாவடைந்துள்ளார். இவர் காலஞ்சென்ற செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா வள்ளிப்பிள்ளையின் அன்புமகளும், காலஞ்சென்ற மாரிமுத்து-சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்பு மருமகளும் தயாளன் (திருமலை) பிரபாகரன் (தீன்சுவை பல்பொருள் வாணிபம், புதுக்குடியிருப்பு) சுந்தரேஸ்வரி (திருமலை),பரமேஸ்வரன் (பிரான்ஸ்), ஜெயவாணி (திருமலை), சுசிகலா (புதுக்குடியிருப்பு), சுதாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரதிதேவி (திருமலை), ஜெனிற்றா (புதுக்குடியிருப்பு), சந்திரன் (கிறீஸ்), நகுலேஸ்வரன் (கட்டார்), கவிதா (இந்தியா), வின்ஸ்ரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், டிலக்ஷன், யாழினி, ஜெனா, ஜெயந், நிது, தர்சன், தனு, ஹது, விஜித், ஹரணி, மிது ஆகியோரின் பாசமிகு பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.03.2005 அன்று நடைபெற்று பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பிரபாகரன் (மகன்)
தீன்சுவை பல்பொருள்வாணிபம்
புதுக்குடியிருப்பு

(5888)


## விண்ணப்பம் கோரல்

* திட்ட முகாமையாளர்
* திட்ட அலுவலர்
* பொறியியலாளர் (Civil)
* எழுதுனர்
* வெளிக்கள உத்தியோகத்தர்

ஆகிய பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. இதற்கான விண்ணப்பத்தை 10.04.2005 இற்கு முன்பாக கீழ்க்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

* கல்வித்தகைமை:-க.பொ.த (உ/த), /பட்டதாரிகள்.
* குறிப்பு:- அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொருண்மிய மதியுரையகம்,
A-9 வீதி,
இரணைமடுச் சந்தி, Tel:021 228 5009
கிளிநொச்சி.

(5887)

-தென்மராட்சிப் பிரதேசத்தில்-

# சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிப்பு

(தென்மராட்சி)

**யாழ். தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மூலம் சேதமடைந்த வீடுகளை புனர்நிர்மாணம் செய்ய எதுவித உதவிகளையும் அரசாங்கம் வழங்கவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

இப்பகுதியில் எண்ணாயிரம் வீடுகள் கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் தரை மட்டமாக்கப்பட்டிருப்பதுடன் எண்ணாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட வீடுகள் பகுதியாகச் சேதமாக்கப் பட்டுள்ளன.

எனினும் இவற்றைப் புனரமைப் பதற்கான உதவிகள் எதனையும் வழங்காத அரசாங்கம் தென்னிலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு சமகாலத்திலேயே புதிய புதிய திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## ஆபாசப்படம் பார்த்தோர் கலாச்சாரக் குழுவிடம் சிக்கினர்

(தீவகம்)

யாழ் தீவகத்திலுள்ள புங்குடு தீவுப் பகுதியில் ஆள்நடமாட்டமற்ற கைவிடப்பட்ட வீடொன்றினுள் வைத்து ஆபாசப்படம் பார்த்த நான்குபேர் கொண்ட குழு கலாச்சாரம் பேணும் குழுவினிடம் அண்மையில் சிக்கிக்கொண்டது.

இவ்வாறு கலாச்சாரம் பேணும் குழுவினரிடம் சிக்கிக்கொண்ட இவர்கள் நையப்புடைக்கப்பட்ட துடன், இவர்கள் பயன்படுத்திய தொலைக் காட்சிப் பெட்டி மற்றும் டெக், ஒளி நாடாக்கள் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டன. (33)


## சங்கானைப் பிரதேசத்தில் தொழிலாளர்களுக்கு உதவி

யாழ். வலிகாமத்திலுள்ள சங்கானைப் பிரதேசத்தைச் சேர்ந்த கூலித்தொழிலாளர்களின் தொழீற் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் மூவிமென்டோ நிறுவனம் அவர்களுக்கான தொழில் உபகரணங்களை வழங்கி வருகிறது.

இதில் கத்தி, கோடாரி,மண்வெட்டி அலவாங்கு போன்றன வழங்கப்பட்டு வருகின்றன.

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் இலவச கணணிப் பயிற்சி நிலையம் திறப்பு

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரால் நடாத்தப்படும் இலவசக் கணினிப் பயிற்சி நிலையத்திறப்பு விழாநேற்று முன்தினம்மாலை நான்கு மணியள வில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப் பினர் புவிராஜ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் முதன்நிகழ்வாக பொதுச்சுடரினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியற்துறைத் தலைவர் பேராசிரியர் சண்முகலிங்கம், யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பக் கல்லூரி இணைப்பாளர் இராஜரட்ணம், யாழ்மாவட்டமகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, யாழ்.மாவட்ட துணைஅரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன், யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் சிவகரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்துதேசியக் கொடியினை தமிழீழ மாணவர் அமைப்புப்பொறுப்பாளர் நளன்




ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கினை யாழ். பல்கலைக்கழகப் பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் சிவநாதன், யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் தங்கராசா ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து இலவசக்கணினிப்பயிற்சி நிலையப் பெயர்ப் பலகையினை யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி திரைநீக்கம்செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து கணிணிப்பயிற்சி நிலையத்தினை நாடாவை வெட்டி விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறைத் தலைவர் திருமதிசெந்தில் நந்தணன் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து சிறப்புரையினை பேராசிரியர் சண்முகலிங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்ஒன்றியத் தலைவர் றொபின்சன் , தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ,யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழிஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து முதல் நாள் வகுப்புக்கள்ஆரம்பமாகின. (33)

## வயோதிபர் மீது பொலிசார் தாக்கு

(வடமராட்சி)

வல்லிபுரம் கோவில் சோதனைச் சாவடியில் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த வயோதிபர் ஒருவர் பொலிசாரால் அண்மையில் தாக்கப்பட்டுள்ளார்.

வரணி இடக்குறிச்சியைச் சேர்ந்த இவர் பொலிசாரின் சைகையை மீறிச் சென்றதாகப் பொலிசார் இவரைத் தாக்கியுள்ளனர். (28)

## ஆராதனை நிகழ்வு

யாழ்.மாவட்ட கிறிஸ்தவ ஒன்றியத்தால் நடத்தப்படும் தந்தை செல்வா ஜனன தின ஆராதனை நிகழ்வு எதிர்வரும் 31 ஆம் திகதி யாழ். புனிதபரியோவான் தேவாலயத்தில் நடைபெறவுள்ளது (33)

## பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலகச் சங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் நடத்தப் பட்டு வரும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் தரம் ஒன்றிற்கான உள்ளகப் பயிற்சி நெறி நாளை மறுதினம் யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவிருந்தது.

எனினும் அது தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் வருமான மேற்பார்வை செய்வோர்களுக்கான பொதுக்கூட்டம் நாளை முற்பகல் 11.00 மணிக்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கு சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

- காரைநகர் கிராமிய வைத்தியசாலையில் -

## அடிப்படை வசதிகள் இல்லை நோயாளர் பெரும் பாதிப்பு

(காரைநகர்)

யாழ்.காரைநகர் கிராமிய வைத்தியசாலை அடிப்படை வசதிகள் ஏதும் அற்றநிலையில் இயங்கி வருவதனால் இவ் வைத்தியசாலை மூலம் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பூரண பயனடைய முடியாத சூழ்நிலைகாணப்படுகிறது.

சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டமக்கள் மீளக்குடியமர்ந்துள்ள காரைநகர் பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கென இயங்கிவரும் ஒரே ஒரு வைத்தியசாலையான இதில் ஆளணிப்பற்றாக் குறை, மருத்துவ உபகரணம் பற்றாக்குறை, மருந்துப் பொருட்கள் இல்லாமை போன்ற அடிப்படைவசதிகள் இல்லா நிலை தோன்றியுள்ளன.

இது குறித்து அரசாங்கம் எதுவித கவனமும் செலுத்தாத நிலையில் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (33)

## முகாமுக்கு அருகிலுள்ள வடலிகள் இராணுவத்தினரால் அழிப்பு

(தென்மராட்சி)

யாழ். தென்மராட்சியிலுள்ள இராணுவ முகாமை அண்டியுள்ள காணிகளில் உள்ள சிறிய வடலிகளை அம்முகாமில் நிலைகொண்டிருக்கும் படையினர் அழிக்கும் நட்வடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

தம்முகாமின் பாதுகாப்பிற்காக படையினர் மேற்கொள்ளும் இந் நடவடிக்கைகள் குறித்து அக்காணிகளின் உரிமையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

-தீவகக் கல்வி வலயத்தில்-

## ஏழு பாடசாலைகளை தரமுயர்த்த உதவி

(தீவகம்)

யாழ்.தீவகக் கல்வி வலயத்திலுள்ள ஏழு பாடசாலைகளைத் தரமுயர்த்துவதற்கான உதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன் வந்திருக்கிறது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புகளால் பாதிக்கப்பட்ட யாழ். தீவகத்தின் கல்வி நிலைமையை மீளக் கட்டியெழுப்பும் நோக்குடன் ஆசிய அபிவிருத்தி வங்கி இத்தரமுயர்த்தல் நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளது.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியால் பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (33)

## காரைநகர் கடற்படைத் தளம்; பலப்படுத்தப்பட்டு வருகின்றது

(காரைநகர்)

யாழ்.காரைநகர் கடற்படைத்தளத்தினை பலப்படுத்தும் நடவடிக்கைகளில் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்படைத் தளத்தைச் சூழவுள்ள மண்அணைகளையும், முட்கம்பி வேலிகளையும் துரிதமாகப் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் கடற்படையினர் தம் முகாமைச் சூழ புதியகாவலரண்களையும் நிறுவி வருகின்றனர்.

இதேவேளை மேற்படி முகாமை அண்டியுள்ள பகுதிகளில் படையினர் இரவு மற்றும் பகல் வேளைகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (33)

## 25 ஆவது ஆண்டு விழாவும் கட்டடத் திறப்பு நிகழ்வும்

ஏழாலை தெற்கு ஸ்ரீ முருகபுர மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு விழாவும், கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவும் நாளை மறுதினம் திங்கட் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு சங்கத்தலைவி திருமதி பு.கதிர்காமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் சி.திருவாகரன் கலந்துகொள்ளவுள்ளார்.

- யாழ்.நகரை அண்டிய பகுதியில் -

## நன்நீர்க்கிணறுகள் வேகமாக மாசடைந்து வருகின்றன

### - யாழ். மாநகர ஆணையாளர் க.குணராசா தெரிவிப்பு

யாழ். நகரப்பகுதியில் உள்ள நன்நீர்க்கிணறுகள் பலவும் வேகமாக மாசடைந்து வருவதனால் அந்நீரினை மக்கள் பாவனை செய்யமுடியாத நிலைமை தோன்றியுள்ளது. இதனால் யாழ். நகரப் பகுதியில் சுத்தமான குடிநீரைப் பெறுவதில் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன என யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக யாழ். நகரத்தின் கரையோரப்பகுதியிலிருந்து பிரதான வீதிவரையாகவுள்ள பிரதேச கிணறுகளில் 75 வீதமானவையும், பிரதான வீதியிலிருந்து குறுக்காக ஆஸ்பத்திரி வீதிவரையான பகுதியை எல்லைப்படுத்தியுள்ள பிரதேசத்திலுள்ள கிணறுகளில் 50வீதமானவையும் ஆஸ்பத்திரிவீதியையும், ஸ்ரான்லி வீதியையும் எல்லைப்படுத்தியுள்ள பிரதேசத்தில் இருக்கும் கிணறுகளில் 30வீதமானவையும், யாழ். நகரில் உள்ள ஏனைய பகுதிக் கிணறுகளில் 10 வீதமானவையும் மாசடைந்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே நகரப் பகுதியில் வாழ்வோர் கிணற்று நீரினை மாசுபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடாதிருக்குமாறும் அவர் பொது மக்களிடம்வேண்டு கோள் விடுத்துள்ளார். (33)

# மன்னார் பிரதேச சபையை நகரசபையாக மாற்றக் கோரிக்கை

**மன்னார் பிரதேச சபையை நகரசபையாக மாற்றுமாறு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சிற்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

மன்னார் நகரம் முழு மாவட்ட பகுதிகளுக்கும் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யக்கூடிய இடமாகவும், சகல சேவைகளும் சிறந்த முறையில் இடம் பெறுவதாலும் கல்வித்துறையில் பல முன்னேற்றகரமான சாதனைகள் படைக்கப்பட்டமையாலும் அரச திணைக்களங்களின் தலைமை அலுவலகம் இங்கு இயங்கிவருவதுடன் பல்வேறு முக்கிய துறைகள் இங்கு இருக்கின்றன. அத்துடன் அலுவலகங்களும பலம்வாய்ந்த அலுவலகங்களாக இருப்பதாலும் மன்னார் பிரதேச சபையை நகரசபையாக மாற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(18)

# தமிழ்ச்சங்க நிர்வாகிகள் தெரிவு

(முல்லைத்தீவு)

முல்லைமாவட்ட தமிழ்ச் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி காலை 10.00 மணியளவில் ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.சரவணபவான் தலைமையில் வற்றாப்பளை ஆலயத்தில் அமைந்துள்ள கலாச்சார மண்டபத்தில் இடம் பெற்றது. இத்தமிழ்ச்சங்கத்தின் தலைவராக ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.சரவணபவான் , செயளாளராக ஆசிரியர் ஜெயவீரசிங்கம் , பொருளாளராக அதிபர் வீ.சுப்பிர மணீஸ்வரன் , உபதலைவராக ஓய்வுபெற்ற அதிபர் குகதாசன், உபசெயலாளராக அதிபர் இ.செல்வநாயகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், ஆலோசகர்களாக முன்னாள் தொலைக்கல்வி விரிவுரையாளர் திருமதி . இராசசிங்கம், வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.கனகரட்ணம், ஓய்வுபெற்ற முன்னாள் கல்வி அதிகாரி ஏ.கே.மகாலிங்கம் ,கிளி/மாவட்ட நிகொட் திட்டப்பணிப்பாளர் க.பார்த்தீபன் இவர்களுடன் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு விரிவுரையாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (08)



சென்ற 21 ஆம் திகதி அம்பாள்குளம் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினதும் தமிழீழ தேசிய ஊரக வளர்ச்சி பேரவையினதும் அனுசரணையுடன் அமைக்கப் பெற்ற குமா சிறுவர் பூங்கா திறப்பு விழாவின் போது.

# முல்லைத்தீவில் கண்சிகிச்சை பயன் பெறுவோர் தொகை அதிகரிப்பு

லண்டனில் இருந்து வருகை தந்துள்ள சாயி மருத்துவ சிகிச்சை குழுவினர் முல்லை மாவட்ட வைத்தியசாலையில் கண் சிகிச்சையினை கடந்த ஒரு மாத காலமாக வழங்கி வருகின்றனர். இது வரை 1000இற்கும் மேற்பட்ட கண் நோயாளர்கள் தங்களைப் பதிவு செய்துள்ள போதும், நாளாந்தம் 50 இற்கு மேற்பட்டோர் புதிதாக பதிவு செய்த வண்ணம் உள்ளதை நேரடியாகக் காண முடிந்தது. இதுவரை 300 இற்கும் மேற்பட்டோருக்கு கண்ணாடிகள் வழங்கியதோடு தொடர்ந்தும் சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றது. அத்துடன் முல்லை மாவ்ட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் இக்குழுவினரால் கண் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. என்பது குறிப்பிடத்தக்கது.

# அம்பாள்புரத்தில் அரசியல் துறை வலய செயலகம் திறப்பு

பாண்டியன் குளம் பிரதேசத்தின் அம்பாள்புரம் கிராமப் பகுதியில் அரசியல் துறை வலய செயலக திறப்புவிழா நிகழ்வு கடந்த புதன்கிழமை காலை 10.00 மணியளவில் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கிருஸ்ணமூர்த்தி தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் பொதுச்சுடரினை வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்ல பொறுப்பாளர் வளவன் ஏற்ற, தமிழீழ தேசியக் கொடியினை வலயப் பொறுப்பாளர் இ.செந்தூரன் ஏற்றி வைத்தார். அரசியல் துறையின் வலயச் செயலகத்தின் பெயர்ப் பலகையினை நியாப் திட்ட இணைப்பாளர் மதன மோகன் திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து வலய செயல கத்தை நன்னீர் மீன்பிடிச் சங்கத் தலைவர் பன்னீர்செல்வம் நாடா வினை வெட்டித் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்களால் மரக்கன்றுகள் நாட்டப்பட்டது. நன்றியுரையினை வன்னி விளாங்குளம் மாதர் சங்கத் தலைவி செல்வி. ரஜினி நிகழ்த்தினார். நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள், போராளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (24)

# அசுத்தமடைந்து வரும் முள்ளியவளை பொதுச் சந்தையைக் கவனிப்பார் யார்?

(முள்ளியவளை)

முள்ளியவளை பொதுச் சந்தை சுகாதார சீர் கேடான நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

முள்ளியவளை பொதுச் சந்தைக்குள் உள்ள கழிவுகள் அகற்றப் படாமலும் கொட்டப்படுகின்ற குப்பைகள் ஆங்காங்கு குவியலாகவும் உள்ளது. இதேவேளை மீன் சந்தைப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் குட்டை பிடித்த நிலையில், சுகாதார சீர் கேட்டுடன் காணப்படுகின்றன. அத்தோடு சந்தைப் பகுதியில் செடிகள் அகற்றப்படாமலும் உள்ளது. மலசலகூடம் சுகாதார சீர் கேடான நிலையில் உள்ளதுடன் துர் நாற்றம் வீசுகின்றது. பாழடைந்த கொட்டகை ஒன்றும் அகற்றப்படாமல் உள்ளதால் அதன் கிடுகுகள் இற்று காற்றுக்கு பறக்கின்றது. அத்தோடு அக்கொட்டகை பொறிந்து விழுந்த நிலையில் உள்ளது.

இதனால் சந்தைக்கு செல்லும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. (ஆ)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தெற்கு கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்பில் இரண்டாம்மொழி (சிங்களம்) கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியிலும், சகல பாடசாலைகளிலும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் இரண்டாம் ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. குறிப்பிட்ட செயலமர்வுகளுக்கு உரிய ஆசிரியர்களை சமுகமளிக் குமாறு வவுனியா தெற்கு வல யக்கல்விப் பணிப்பாளர் திருமதி. வீ.ஆர்.ஏ. ஓஸ் வேல்ட் கேட்டுள்ளார். (10)

# இடவசதி பற்றாக்குறைக்குள் திருவையாறு மகாவித்தியாலம்

(திருவையாறு)

கிளிநொச்சி வலய கரைச்சி கோட்டத்திற்கு உட்பட்ட திருவையாறு மகாவித்தியாலயம் பெரும் இடப்பற்றாக்குறையுடன் இயங்கிவருகிறது.

சுமார் எண்ணூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்விபயிலும் இந்தப் பாடசாலையில் இரு கட்டடங்களே காணப்படுகின்றன. ஏனையவை ஓலையால் வேயப்பட்ட தற்காலிக கொட்டகைகளாக காணப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பாக அப்பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்;

பாடசாலைக்குரிய போதிய கட்டட வசதி இன்மையால் சுமார் 300 மாணவர்கள் மரநில்களிலேயே கல்வி கற்க வேண்டியதாயுள்ளதாகவும், மழை நேரங்களில் தாம் வகுப்புக்களை நடத்துவதற்கு மிகுந்த சிரமப்படுவதாகவும் தெரிவித்தார். அத்துடன் நூலக வசதி விளையாட்டு உபகரண பற்றாக்குறை மற்றும் ஆய்வு கூட வசதிகள் தமது பாடசாலைக்கு போதுமானதாக இல்லையெனவும் தெரிவித்தார். (து)

# உணவுப்பொதி வழங்கல்

(முல்லைத்தீவு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட அரச பணியாளர்களுக்கு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரினால் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த வாரம் ஒவ்வொரு பணியாளருக்கும் ஒவ்வொரு உணவுப் பொதியும், பால் மா பக்கற்றுக்களும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான பிஸ்கட் வகைகளும், பால்மா பைக்கற்றுகளும் தற்போது அரச அதிபரினால் வழங்கப்பட்டு வருகின்றது. (20)

# முத்துஜயன் கட்டு குளவாய்க்காலில் சிரமதானம்

(முத்துஜயன்கட்டு)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நீர்ப்பாசன இலாகாவின் அனுசரணையுடன் முத்தையன் கட்டுக் குளத்தின் கீழ் 2005 ஆம் ஆண்டு சிறுபோக பயிர்ச் செய்கையில் ஈடுபடும் அனைத்து விவசாயிகளும் இணைந்து முத்துஜயன் கட்டுக் குளத்தின் கீழ் வலதுகரை, இடதுகரை பிரதான நீர்ப்பாசன வாய்க்காலில் பாரிய அளவிலான துப்புரவுப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். நூற்றுக் கணக்கான விவசாயிகள் கலந்து கொண்டு 22 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை இச்சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வேலையின் மொத்தப் பெறுமதி ஐந்து லட்சம் ரூபா வரையாக இருக்குமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (08)

### *10 கட்ட நிவாரணம் வழங்கப் பணிப்பு*

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கப்படும் 375 ரூபா பெறுமதியான உலர் உணவு நிவாரணப் பொருட்களில் உடனடியாக 10 கட்டடங்களை வழங்குமாறு முல்லை மாவட்ட அரச அதிபர் இமல்டா சுகுமார் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிற்குப் பணிப்புரை விடுத்துள்ளார். இதுவரை மூன்று தடவையே வழங்கப்பட்ட நிலையில் மார்ச் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பு குறிப்பிட்ட 10 கட்டடங்களும் வழங்கப்பட வேண்டுமென மேலும் அவர் தெரிவித்துள்ளார். (20)

# வறிய குடும்பங்களுக்குப் பண உதவி

(வட்டக்கச்சி)

பெண்கள் புனர்வாழ்வு நிறுவன அனுசரணையுடன் யு.என்.டி.பி நிறுவன நிதியுதவியுடன் வட்டக்கச்சி கிராம மக்கள் 15 பேருக்கு கடந்த புதன்கிழமை அன்று நண்பகல் 1.30 மணிக்கு அருச்சுனா முன்பள்ளியில் வைத்து பணம் வழங்கப்பட்டது.

வறிய மக்களின் சுயதொழில் ஊக்குவிப்புக்காக 15 பயனாளிகளுக்கு தலா 15000.00 ரூபாய் வீதம் வழங்கப்பட்டது. (12)

# சான்றிதழ் வழங்கப்பட்டது


(திருகோணமலை)

கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் ஆங்கில மொழிப் பயிற்சிச் சான்றிதழ் நெறியை முடித்துக்கொண்டு வெளியேறும் மூன்றாவது தொகுதி மாணவருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வளாக மண்டபத்தில் வளாக முதல்வர் வணபிதா டாக்டர் சி.பி.இராஜேந்திரம் தலைமையில் நடைபெற்றது. (25)

# பிரிட்டனில் பொதுத் தேர்தல்; 15 தினங்களில் பிரதமர் அறிவிப்பார்?

(லண்டன்)

**ஏப்ரல் ஐந்தாம் திகதி பிரிட்டனில் பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பை பிரதமர் டொனிப்பிளேயர் வெளியிடுவார் என பி.பி.சி. தெரிவித்துள்ளது.**




இதற்கான அதிகார பூர்வ அறிவிப்பை அடுத்த 15 தினங்களுக்குள் பிரதமர் அறிவிப்பார் எனவும் அது தெரிவித்துள்ளது.

ஆனால் பிரதமர் டொனி பிளேயரின் அதிகார பூர்வமான பத்திரிகைத் தொடர்பாளர் இதை உறுதிப் படுத்த மறுத்து விட்டார்.

பொதுத் தேர்தலை நடத்துவதற்கு டொனி பிளேயர் தயாராக உள்ளதாகவும் அதற்கான அறிவிப்பு அடுத்த மாதம் 4 அல்லது 5ஆம் திகதிகளில் வெளியாகலாமென பி.பி.சி தெரிவித்துள்ளது.

தேர்தலுக்கு முன் ஒரு மாதத்துக்கு தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்ய வேண்டியுள்ளதால் ஏப்ரல் 4ஆம் திகதி பாராளுமன்றத்தைக் கலைக்க எலிசபெத் ராணியிடம் பரிந்துரை செய்யப்படவுள்ளதாகவும் அது தெரிவிக்கிறது. டொனி பிளேயர் அரசின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஜூன் மாதம் வரையுள்ளது. இருப்பினும் தேர்தலை ஒரு ஆண்டுக்கு முன்பே நடத்த அவர் திட்டமிட்டுள்ளதாகவும் பி.பி.சி தெரிவித்துள்ளது.



ஜப்பானில் நடைபெறும் உலகக் கண்காட்சி நிகழ்வின் முதல் நாளான நேற்று அதனைத் தரிசிக்க வரிசையில் நிற்கும் மக்களையும் சம்பந்தப்பட்ட நாடுகளின் கொடிகளையும் காணலாம்.

# கடந்த வருடத்தில் மாத்திரம் 78 பத்திரிகை நிருபர்கள் பலி

(வியன்னா)

கடந்த 2004ஆம் ஆண்டில் மட்டும் உலகில் மொத்தம் 78 நிருபர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஈராக்கில் மட்டும் படுகொலை செய்யப்பட்ட நிருபர்கள் 23 பேர் 191 நாடுகளில் பத்திரிகைச் சுதந்திரம் எவ்வாறு உள்ளது. என்பதை இன்டர்நஷனல் பிரஸ் இன்ஸ்டிட்யூடி கண்காணித்து வருகிறது. வியன்னாவில் செயற்படுகிறது


ஆண்டு தோறும் கொல்லப்படும் நிருபர்களைப் பற்றிய புள்ளி விபரங்களையும் இந்த அமைப்பு சேகரித்துள்ளது.

1999 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஓர் ஆண்டில் அதிகாளவு நிருபர்கள் கொல்லப்படுவது இதுவே முதல் முறை 1999இல் 86 நிருபர்கள் கொல்லப்பட்டனர்.

2003இல் ஈராக்கில் மட்டும் 19 நிருபர்கள் கொல்லப்பட்டனர். 2004 இல் இந்த எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளது. ஈராக்கிற்கு அடுத்த படியாக பிலிப்பைன்சில் 12 நிருபர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். 2003 இல் ஐந்து நிருபர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். ஆசியா, வட ஆபிரிக்கா மத்திய கிழக்குப் பகுதி களில் தலா 23 நிருபர்கள் கொல்லப் பட்டுள்ளனர். அஜர்பைஜான் பெலா ரஸ் சீனா, கியூபா இந்தோனேஷியா, மியான்மர், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின நிருபர்களுக்கு அரசியல் வாதிகளிடமிருந்து கடும் மிரட்டல் வந்துள்ளது.

# கிர்கிஸ்த்தான் தேர்தலில் குழறுபடி அரசு அலுவலகம் தீ வைப்பு; சனாதிபதி தப்பியோட்டம்

(பிஷகக்கேக)



முன்னாள் சோவித் குடியரசில் ஒன்றாக இருந்து பிறகு தனியாகப் பிரிந்த நாடுகளில் ஒன்று கிர்கிஸ்தான்

கடந்த பெப்ரவரி மாதம் கிர்கிஸ்தானில் பாராளுமன்றத் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அதிபர் ஆஸ்கர் அகாயேவின் மகள் மற்றும் மகன் வெற்றி பெற்றதாகவும் அறிவிக்கபட்டது.

ஆனால் இந்தத் தேர்தலில் தில்லு முல்லு நடந்ததாக எதிர்க்கட்சிகள் புகார் கூறின. இந்தத் தேர்தல் செல்லாது என்றும் சனாதிபதி மற்றும் பிரதமர் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்தி எதிர்க்கட்சிகள் கலவரததில் ஈடுபட்டனர்.

கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக இந்தக் கலவரம் உச்சக் கட்டத்தை எட்டியதும் அரசு அலுவலகங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. முக்கிய அரசு அலுவலகங்களையும் எதிர்க்கட்சியினர் கைப்பறினார்கள்.

சிறைச்சாலையைத் தாக்கி அங்கு அடைத்து வைக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர்களை விடுதலை செய்தனர்.

கலவரம் கட்டுக்கடங்காமல் போகவே பிரதமர் நிக்கோலாய் தான் சாயேவ் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

சனாதிபதி ஆஸ்கர் அகாயேவ் குடும்பத்துடன் வெளி நாட்டுக்குத் தப்பியோடிவிட்டார். அவர் ரஷ்யாவுக்கோ அல்லது கசகஸ்தானுக்கோ சென்று அங்கு தஞ்சம் புகுந்து இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட எதிர்க்கட்சி எம்.பி இஷினாபாய் காதிர் பெகோயை தற்காலிக அதிபராக எதிர்க்கட்சிகள் நியமித்திருக்கின்றன. பாதுகாப்புத்துறை அமைச்சராக பெலிக்ஸ் குருலோவ், உள்துறை அமைச்சராக குர்மான், பெக் பகியேவ் ஆகியோரை எதிர்க் கட்சிகள் நியமித்துள்ளன

# இந்தியா கவலை

பாகிஸ்தானுக்கு இராணுவ உதவிகள் வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளதற்கு இந்தியா தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது.

மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் ராவ் இந்தர்ஜித் சிங் மாநிலங்களவையில் இத்தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது, பாகிஸ்தானுக்த இராணுவம் முதலான உதவிகள் வழங்குவதற்கான சட்டத்தில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் கையெழுத்திட்டுள்ளார். இதற்கு அமெரிக்காவிடம் இந்தியா கவலையைத் தெரிவித்துள்ளது. பாதுகாப்புச் சபையில பாகிஸ்தான் இடம்பெற ஜப்பான் ஆதரவு தெரிவித்துள்ளது. ஆனால் பல ஐக்கிய நாடுகள் இதை எதிர்த்துள்ளன என்றார்.

# அமெரிக்காவில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் வெடித்துச் சிதறியது 14 பேர் பலி ; 71 பேர் காயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்ஸாஸ் நகரில் இயங்கிவரும் பிரிட்டன் நிறுவனம் ஒன்றுடன் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் புதன்கிழமை வெடித்துச் சிதறியதில் 14 பேர் உயிரிழந்தனர். 70இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.


லண்டனைச் சேர்ந்த பிபி என்ற எண்ணெய் நிறுவனம் அமெரிக்காவில் தன்னுடைய மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவியுள்ளது. அந்த நிலையத்தில்தான் மிகப்பெரும் வெடிவிபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்திற்கு நாச வேலை காரணம் அல்ல என்று கருதப்பட்டாலும் இதுவரை சரியான காரணம் தெரியவில்லை. விசாரணை நடந்து வருகிறது.


இதுவரை 14 பேர் இறந்துள்ளதாகத் தெரிகிறது இருப்பினும் விபத்து நடந்த நேரத்தில் எத்தனை பேர் அங்கு இருந்தனர் என்பதைக் கணக்கிட்ட பிறகே மொத்த சாவு எண்ணிக்கை தெரியவரும். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த நாள் டெக்ஸாஸிற்கும், பி.பி எண்ணெய் நிறுவனத்திற்கும் மிக மோசமான நாள் என நிறுவன மேலாளர் டான் பாரஸ் கவலை தெரிவித்தார்.

டெக்ஸாஸ் நகரில் ஏற்பட்ட இந்த விபத்துக் காரணமாக உற்பத்தி குறையும் என்ற அச்சத்தில் உலக சந்தையில் எண்ணெய் விலை உயர்ந்துள்ளது



அமெரிக்காவில் டெக்சாஸ் நகரில் தீ விபத்துக்குள்ளான எண்ணெய் சுத்திரிப்பாலையில் தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



ஆசியாவின் ஒரே ஒரு கத்தோலிக்க நாடான பிலிப்பைன்ஸ் கிராமமொன்றில் பெரிய வெள்ளியாகிய நேற்றைய தினம் மதவழிபாடுகளிலும், பாவமன்னிப்புக் கோருவதிலும் மக்கள் ஈடுபட்டனர்.

# ஆற்றில் படகு கவிழ்ந்தது பாகிஸ்தானில் 20 பேர் பலி

பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியில் பஞ்சாப் மாகாணத் தில் உள்ளது மிதான் கோட் நகரின். மையப் பகுதியில் ஓடும் ஆற்றில் போக்குவரத்தில் படகு ஒன்று கவிழ்ந்தது. இந்தப் படகில் இருந்தவர்களில் 20 பேர் தண்ணீரில் மூழ்கிப் பலியாகி விட்டனர். இதுவரை மூன்று உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டுள் ளது. மற்ற உடல்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. படகு மூழ்கும் போது இப் படகில் 50 பயணிகள் வரையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது

# புனித பீட்டர் சதுக்கத்தில் நேரில் ஆசி வழங்கினார் பாப்;



உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ள பாப்பாண்டவர்,புனித பீட்டர் சதுக்கத்தில் திரண்டிருந்த மக்களுக்கு புதன்கிழமை ஆசி வழங்கினார்.

ஒரு நிமிட நேரம் காட்சி அளித்த அவர். சிலமுறைதன் கைகளை உயர்த்தி ஆசி வழங்கினார்.


பாப்பாண்டவர் ஆசி வழங்குவார் என்று அறிவிக்கப்பட்டு 15 நிமிடங்கள் கழித்தே அவர் அழைத்து வரப்பட்டார். தாமதத்துக்கு காரணம் எதுவும் கூறப்படவில்லை.

பாப்பாண்டவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை பலன் அளிக்கவில்லை என்று பத்திரிகைச் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் அவரை நேரில் காண மக்கள் மிகவும் ஆர்வத்துடன் கூடியிருந்தனர்.

பாப்பாண்டவரை மீண்டும் மருத்துமனையில் சேர்க்க வேண்டிய தேவையில்லை என்று அவருக்குச் கிச்சை அளித்துவரும் மருத்துவக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

# ஜோர்ஜ் பெர்னாட்ஷா

இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த ஆங்கில நாடக ஆசிரியர், அஞ்சா நெஞ்சம் கொண்ட சிந்தனையாளர் ஜோர்ஜ் பெர்னாட்ஷா. அவர் பிறந்த வருடம் பற்றி அவரே கூறுகிறார்.



"1856 இல் இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் நடந்தன. ஒன்று பெருங்கவிஞன் டென்னிசனின் கவிதைகள் வெளியாகின. மற்றொன்றைக் கூறவிடாமல் என் தன்னடக்கம் தடுக்கிறது. இருந்தாலும் சொல்கிறேன் மற்றொன்று நான் பிறந்தது."

இவர் 1856 ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் திகதி பிறந்தார். "எதையும்நகைச்சுவையுடனும் இலக்கியச் சிறப்புடனும் கூறுபவர் ஷா என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

ஷாவின் தந்தை பெயர் ஜோர்ஜ்கர்ஷா-அயர்லாந்து நீதி மன்றத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். தயாரின் பெயர் எலிச பெத்கர்லி. போதிய வசதியில்லாத காரணத்தால் இளம் வயதிலேயே பள்ளிப்படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். ஷா 15வயதிலேயே குமாஸ்தா வேலைக்குச் சென்றார். சுதந்திர மனம் படைத்த அவர் அந்த வேலையில் நீடிக்கவில்லை. 1876 முதல் சுமார் பத்து ஆண்டுக்காலம் வேலைக்குப் போகாமல் சும்மா இருந்தார்.

ஷாவின் தாயார் இசை ஆசிரியையாகப் பணியாற்றி வந்தார். "நான் உழைத்து என் அன்னையைப் காப்பாற்றவில்லை. என் தாயின்உழைப்பைத்தின்று கவலையற்றுத் திரிந்தவன் நான். என் தாயார், தான் உழைத்து, என்னை உழைக்காதவனாக வாழ வைத்தார்." என்று ஷா குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்பத்தில் ஷா நாவல்கள் தான் எழுதினார். ஆனால் அவற்றுக்கு வரவேற்பு இல்லை. பின்னர் நாடகங்கள் எழுத ஆரம்பித்தார். அவை பெரும் வரவேற்பைப் பெற்றன.

ஷா தன் நாடகங்களுக்கு நீண்ட முன்னுரைகள் எழுதுவது வழக்கம். நாடகங்களை விட அந்த முன்னுரைகள் மிகச் சிறந்தவையாக விளங்குவதாகப் பலர் கருதினர். ஷா மொத்தம் 58 நாடகங்கள் எழுதினார்.

ஷாவுக்கும், பெய்னடவுன் செண்ட் என்ற பெண்மணிக்கும் 1898 இல் திருமணம் நடந்தது. அப்போதுஷாவுக்கு வயது 40, மணமகளுக்கு வயது 39.

இருவரும் 45 ஆண்டுகள் ஒற்றுமையோடு வாழ்ந்தனர். 1943 இல் ஷாவின் மனைவி மரணம் அடைந்தார்.

ஷா இறுதி வரை சைவ உணவையே உண்டு வந்தார். அது மட்டுமல்ல மது அருந்துவதில்லை, சிகரெட் பிடிப்பதில்லை.

தான் சைவ உணவை மட்டும் உண்ணுவது குறித்து ஷாவுக்கு பெருமை அதிகம் "நான் இறந்தால் என் சவ ஊர்வலத்தைத் தொடர்ந்து ஏராளமான ஆடுகளும், மாடுகளும், பன்றிகளும், கோழிகளும், மீன்களும் வெள்ளை மேலங்கி அணிந்து வரும். உயிரினங்களைச் சாப்பிடாத ஒரு மனிதனுக்கு அவை அளிக்கும் மரியாதை அது"என்று அவர் ஒரு முறை குறிப்பிட்டார்.


1925 ஆம் ஆண்டில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஷாவுக்கு வழங்கப்பட்டது. முதலில் அதை ஏற்க மறுத்தார். ஷா "நீரில் மூழ்கியவன் மூச்சுத்திணறி கரை ஏறிய பிறகு. அவனுக்கு பாதுகாப்பு பெல்ட்டை எறிகிறமாதிரிதான் இந்தப் பணம்" என்றார் அவர்.

பின்னர் பலர் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதால் அப்பரிசைப் பெற்றார். ஆனால் பரிசுத் தொகை முழுவதையும் இலக்கிய வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் நன்கொடையாகக் கொடுத்து விட்டார்.

1949 இல் அவருடைய 93 ஆவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது. அப்போது அவர் "மரணம்என்னை அழைக்கிறது அதை நான் வெறுக்கவில்லை" என்றார்.

ஒருநாள் அவர் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தபோது கால் இடறிக் கீழே விழுந்து விட்டார் அதனால் அவர் தொடை எழும்பு முறிந்து விட்டது. அதற்காக அவருக்கு சத்திர சிகிச்சை நடந்தது. அதன் பின் அவர் குணமடைந்தார். என்றாலும், 1950 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாம் திகதி தன்னுடைய 95 ஆவது வயதில் மரணம் அடைந்தார்.

# நவீன புகைப்படக் கருவி



இங்கு காணப்படும் புகைப்படக்கருவி வீடியோக் கமராவாக தொழிற்படக் கூடியவகையில் தயாரிக்கப்பட்டது. இதன் ஒளிப்பதிவு தட்டு 2.2 செ.மீ சுற்றளவைக் கொண்டது. இதனை கமராவில் பொருத்தி பாதுகாக்கக் கூடிய அமைப்பு ஒன்றும் இதில் காணப்படுகிறது. இதன் பெறுமதி 1150 அமெரிக்க டொலர்களாகும்.

# 12 அடி நீள காட்டுப் பன்றி


ரஷ்யாவின் காட்டுப்பகுதியில் 12 அடி நீள ராட்சத காட்டுப் பன்றிகள் உள்ளது தெரிய வந்துள்ளது.

ரஷ்யாவின் ஜார்ஜியா பிராந்திய காட்டுப்பகுதிகளில் ராட்சத காட்டுப் பன்றிகள் வாழ்வதாக அந்தப் பகுதி மக்கள் கூறி வந்தனர். ஆனால் யாரும் அத்தகைய ராட்சத பன்றி களை நேரில் பார்த்தது கிடையாது.

இந்நிலையில் கடந்த கோடை காலத் தில் கிறிஸ் என்ற வாலிபர் உண்மை யாகவே 12 அடி நீள ராட்சத காட்டுப் பன்றியை சுட்டு வீழ்த்தினார். இந்தக் காட்சி தேசிய ஜியோகி ராபிக்ஸ் அலைவரி சையில் சமீ பத்தில் ஒளி பரப்பப்பட்டது. அந்தக் காட்சியைப் பார்த்த பொது மக்கள் வியப்பில் ஆழ்ந் துள்ளனர்.

# பனிமலை உருகாமல் தடுக்க பி.வி.சி தடுப்பு உறைகள்

சுவிட்சர்லாந்து நாட்டில் பனி மலை உருகாமல் தடுக்க பி.வி.சி. தடுப்பு உறை விரிக்கப் படுகிறது. சுவிட் சர்லாந்தில் ஆன்டர் மாட் என்ற உல்லாசப் பயணிகள் தலம் உள்ளது, இங்கு கர் ஷன் என்னும் பனிமலைப் பகுதி உள்ளது. பூமியின் வெப்ப நிலை அதிகரித்து வருவதால் பனிச்சிகரங்கள், பனிமலைகள் உருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதைத் தடுக்க கர்ஷன் பனிமலையை மறைக்கும் வகையில் அதன் மீது பி.வி.சி. போம் உறை விரிக்கப்பட உள்ளது. 32 ஆயிரம் சதுர அடி பரப்புக்கு இந்த உறை விரிக்கப்படும். இந்தத் திட்டம் வெற்றி பெற்றால் மற்றப் பனி மலை பகுதிக்கும் இதை விரிவுபடுத்த சுவிற்சர்லாந்து அரசு திட்டமிட்டுள்ளது.




செல்லிடத்தொலைபேசி உற்பத்தியில் அதிநவீன கருவிஒன்றை நொக்கியா நிறுவனம் தயாரித்துள்ளது. "நொகியா 9300" என்ற இக்கருவி செல்லிடத் தொலைபேசி தொடர்புகளை சிறுகணியுடன் தொடர்பு படுத்தி சிறு கணினியாகவும் குறிப்புப் புத்தகமாகவும் பயன் படுத்தப்படுகிறது.

# வாகனங்களின் புகை டீ.என்.ஏ யைப் பாதிக்கிறது

வாகனங்களில் இருந்து வெளியேறும் புகைக்கும டீ.என்.ஏ (D.N.A) பாதிப்பிற்கும் தொடர்புள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

அண்மையில் தாய்வான் தேசிய பாதுகாப்பு மருத்துவ மைய சிங்குவாங் தலைமையிலான ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்விலிருந்தே வாகனங்களின் புகை டீ.என். ஏ யைச்சேதப் படுத்துகின்றது எனக் கண்டு பிடித்துள்ளனர்.

இவர்கள் முதற்தர பெருந்தெருக்கள் தொழிலாளர் 47 பேரின், குருதி, சிறுநீர் மாதிரிகளை எடுத்து ஆய்வுகளை மேற்கொண்டதில் டீ.என்.ஏ யில் சேதத்தை ஏற்படுத்தக் கூடிய இரசாயன மூலக் கூறுகள் (8-OHdG) இருமடங்காகக் காணப் பட்டமை அறியப்பட்டுள்ளது. அத்துடன் வாகனங்களிலிருந்து வெளிவிடப்படும் வாயுக்கள் உட் சுவாசத்தின் மூலம் உட் செல்வதால் குருதியில் 1-OHP என்ற இர சாயணப் பொருள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# ஆசியாவில் அழிந்து போகும் பருந்தினம்


ஆசியாவில் மூன்று வகையான பருந்து இனங்கள் விரைவாக அழியும் ஆபத்து உள்ளது. கடந்த 12 ஆண்டுகளில் 97 சதவீதம் அழிந்து விட்டன. மீதமுள்ள பருந்துகளை பாதுகாக்க எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மனிதர்கள் உட்பட இறந்த பிராணிகளின் உடல்களை பருந்துகள் விரும்பிச் சாப்பிடும். எனவே இறந்த அழுகிய உடல்களை தின்று அழிக்க பருந்துகளின் சேவை மிகவும் தேவைப்படுகிறது. துப்புறவு செய்யும் தொழிலை அவை திறம்பட செய்து வருகின்றன. ஆனால் பெருமளவில் பருந்துகள் அழியக் காரணம் என்ன என்று ஆராயப்பட்டது. இறந்துபோன பருந்துகளின் உடலை ஆராய்ந்ததில் -டிக்ளோ பெனாக் என்ற வலிகுறைப்பு மாத்திரைகளின் தன்மை அவற்றின் உடலில் இருப்பது தெரிய வந்தது. அதாவது இறந்து அழுகிய உடல்களில் இருந்து இந்த மாத்திரையின் தன்மைகள் பருந்துகளுக்கும் வந்து சேர்ந்து இருக்கலாம் எனக் கண்டறியப் பட்டது.

# அபூர்வப் பிறவிகள்

பாகிஸ்தான் மிருகக்காட்சி சாலையில் இரு வேறு நிறத்தில் அபூர்வ குட்டிகளை புலி ஈன்று ள்ளது. பாகிஸ்தான் லாகூர் நகரில் ரோசி என்ற பெயரில் வங்காளப் பெண் புலி உள்ளது. வயது ஆறு. இது இப்போது இரண்டு குட்டிகளை ஈன்று ள்ளது. இரண்டு குட்டிகளும் வெவ்வேறு நிறங் களில் பிறந்துள்ளன. இவ்வாறு ஒரே பிரசவத்தில் இரண்டு வெவ்வேறு நிறங்களில் புலிக் குட்டிகள் பிறப்பது மிகவும் அபூர்வம் என்று கூறப்படுகிறது. இந்த அதிசய ஜோடியைப் பார்க்க தினந் தோறும் கூட்டம் அலை மோதுகிறது.

# இங்கு மருத்துவ சிகிச்சைகளை வழங்குவது முற்றிலும் புதுமையான அனுபவமாகவுள்ளது

**லண்டனில் இருந்து வருகை தந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சையினை மேற்கொண்டு வரும் டாக்டர் பிலிப் டியூறி அவர்களுடனான நேர்காணல்.**



த.குகனேஸ்வரன்

லண்டனிலிருந்து வருகை தந்திருக்கும் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரினால் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை கடந்த வாரம் தொடக்கம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை என்பது இலகுவான முறையில் மேற்கொள்ளக்கூடிய சிகிச்சை அல்ல. மிகவும் கடினமானதும் நுட்பமான முறையிலும் மேற்கொள்ள வேண்டியதுமாகும். இவ்வாறான இச்சிகிச்சையினை வன்னிப் பகுதியில் வந்து செய்ய வேண்டும். வன்னிப் பகுதியில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்த யுத்தம் காரணமாக ஏற்பட்டிருந்த தாக்கங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கும் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற நோக்குடன் இங்கிலாந்தின் நியூகாசிங் என்ற இடத்தில் இருந்து வருகை தந்திருக்கும் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் பிலிப் டியூறி அவர்களிடம் மேற்படி சிகிச்சை தொடர்பாக கேட்டறிந்தவையும் அவர் கூறிய விடயங்களும் பின்வருமாறு.

இவர் பழைய முகக்காயங்கள், தழும் புகள், எரிகாயங்கள்,கை,கால்களில் ஏற்பட்டிருக்கும் காயங்கள் என்பவற்றிற்காக மேற்கொள்ளப்படும் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையினை இவர் கடந்த 15 வருடங்களாக இங்கிலாந்தில் மேற்கொண்டு வருகின்றார்.

லண்டனிலிருந்து வன்னிக்கு வந்து இந்த சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்குரிய முக்கிய நோக்கம் பற்றி அவர் கூறும் போது, என்னுடைய நண்பர் ஒருவர் வன்னியில் இருந்தார். அவருடைய மைத்துனர் சுனாமியால் இறந்து போயுள்ளார். அதனால் அவருடன் இங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிறைய சேவை செய்ய வேண்டும் என்ற விருப்பம் எனக்கு அதிகம் இருந்தது. அதை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே இங்கு வருகை தந்து இச்சிகிச்சையினை இயலுமான அளவு செய்து முடிப்ப தற்கு முயற்சி செய்து வருகின்றேன்.

நான் இங்கு வரும்போது சுனாமி சம்பந்தமான மருத்துவம் தொடர்பான பிரச்சினைகள் பலவற்றிற்கு தீர்வுகள் கண்டு விட்டனர். ஆனால் இந்த முகக் காயங்கள், தழும்புகள், பழைய காயங்கள் என்பவற்றை மக்கள் எதிர்நோக்கி இருந்ததனால் அது சம்பந்தமான சிகிச்சையினை நான் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இந்தச் சிகிச்சையை எவ்வளவு காலம் வழங்குவேன் என்று கூற முடியாது. அது வருகின்ற நோயாளர்களின் தொகையைப் பொறுத்துத்தான் கூறமுடியும். பிரதானமாக கிளிநொச்சியில் இருந்து சிகிச்சை மேற்கொள்கின்றேன். இதைவிட வேறு வைத்திய சாலைகள் இச்சிகிச்சை செய்ய அழைத்தால் அங்கும் சென்று சிகிச்சை செய்யவுள்ளேன்.


நான் எனது விருப்பத்தின் பெயரிலேயே இங்கு வந்தேன். அத்துடன் கிளிநொச்சி மருத்துவ சங்கத்தினர் என்னைப் போன்ற நிபுணர்களை அழைத்து ச் சிகிச்சைகளை மேற்கொள்வதில் ஆர் வமாக இருந்திருக்கிறார்கள். அதன் காரணமாக நான் இங்கு வருகை தருவது சுலபமாக இருந்தது.

இங்கு வந்து சிகிச்சை செய் வது மிகவும் அருமையாகவும், ஒரு புது அனுபவமாகவும் இருந்தது. காரணம் வெப்பம்.அத்துடன் நுளம்பும் அதிகம். இதை ஒரு புது அனுபவமாகத்தான் நான் கருதுகிறேன்.

மேலும் நான் வன்னியில் வந்து சேவை செய்ததில் சில பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி இருந்தது. பிரதானமாக இரண்டு பிரச்சினைகள் உள்ளன. ஒன்று இப்படியான பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்குரிய நோயாளர்களை உடனுக்குடன் நான் பார்வையிடவேண்டிய தேவை உள்ளது. ஆனால் வரும் நோயாளர்கள் அதிகதூரத்திலிருந்து வருவதனால் அவர்களுக்கும் கடினமானது. எனது சிகிச்சையும் பூரனமாக முடிக்கப் பெறாமல் போய் விடும் அதனால் பூரணமான சிகிச்சையாக அது அமையாது போய்விடும்.

அடுத்த பிரச்சினை இச்சிகிச்சையினை மெற்கொள்ளக்கூடிய வைத்தியசாலை உபகரணங்கள் போதியளவு இவ் வைத்திய சாலையில் இல்லை. சத்திர சிகிச்சை நிலையம் வசதியாக இருந்தாலும் உபகரணங்கள் போதிய அளவு இல்லாததினால் இச் சிகிச்சையை மேற்கொள்வது கடினமானதாகவும் உள்ளது.

இருந்தாலும் இந்தச் சிகிச்சைகளை மேற்கொள்வதில் மாவட்ட வைத்திய அதிகாரி மிகவும் ஆர்வமாகச் செயற்பட்டார். மிகவும் அக்கறையாக உள்ளார். ஒவ்வொரு சனிக்கிழமையும் இந்த கிளினிக்கை ஒழுங்கான முறையில் ஒழுங்கமைத்துத் தருகின்றார். அத்துடன் வைத்தியசாலை வைத்தியர்கள் அனைவரும் எனக்கு ஒத்துழைப்புத் தருகின்றனர். அதனால் இந்த கஷ்ரங்கள் எல்லாம் பெரிதாகத் தெரிய வில்லை. இருக்கின்ற உபகரணங்களுடன் நானும் வெளி நாட்டிலிருந்து கொண்டு வந்த சில ஆயுதங்களைப் பயன்படுத்தி சத்திர சிகிச்சையை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.



இதைவிட இன்னும் ஒன்றை கூற விரும்புகின்றேன். நான் இங்கு வந்து தங்கி நிற்பதற்குரிய சகல ஒழுங்குகளையும் கருணா நிலையம் மேற்கொண்டுள்ளது. அதனால் அவர்களுக்கும் நன்றி கூற விரும்புகின்றேன்.

இங்கு வருகின்ற நோயாளர்களில் பிரதானமாக எரிகாயங்களுடன் வருபவர்களின் தொகை அதிகமாகக் காணப்படுகின்றது. இதில் போர்க் கருவிகளால் ஏற்பட்ட காயங்களும் இருக்கின்றது. ஆனால் இந்தக் காயங்களுக்கு எமது நாட்டில் உடனுக்குடன் சிகிச்சை மேற்கொளப்படுவதனால் தளும்புகள், அடையாளங்கள் இருக்காது. இங்கு அவ்வாறு இல்லை. இங்கு நோயாளர்களுக்கு அப்படி வசதிகள் இல்லாததினால் பெரிய பெரிய காயங்கள், தழும்புகளுடன் வருகின்றனர். இதனால் அவற்றை பூரணமாக இல்லாமல் செய்வதென்பதற்கு அப்பால் அவர்களுடைய செயற்பாடுகளுக்கு இடையூறு இல்லாமலும் அதிகளவில் இருந்த தழும்புகளை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவிற்கு குறைக்க முயற்சிக்கின்றேன்.

ஆனால் கையில் முழங்கைப் பகுதியில் காயம் ஏற்பட்டிருந்து அது செயற்படாமல் இருந்தால் மற்றும் கழுத்துப் பகுதியில் ஏற்பட்டு கழுத்து அசைவுகளுக்கு சிக்கலாக இருந்தால் அவற்றை பூரணமாக செயற்பட வைக்க முடியும். அதை நிச்சயம் நான் செய்வேன்.

இங்கிலாந்துடன் இங்குள்ள நோயாளர்களை ஒப்பிடும் போது இங்கு எரிகாயம் அதிகமாகத்தான் உள்ளது. அங்கு 50 வீதமான எரிகாயங்கள் சிறுவர்கள் சுடு தண்ணியில் விளையாடுவதனால் ஏற்பட்டிருந்தது. மற்றய 50 வீதம் எரிவாயு மற்றும் இரசாயனங்கள், தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களால் ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால் இலங்கையைப் பொறுத்த மட்டில் அதுவும் வன்னிப் பகுதியில் அதிகளவில் எரிகாயங்கள் காணப்படுகின்றது. அதுவும் அதிகளவில் மண்ணெண்ணை குப்பி விளக்குகளில் ஏற்பட்ட தீ விபத்துக்கள், தற்செயலான வெடி விபத்துக்கள், வெடிபொருட்களை சிறுவர்கள் தவறுதலாகக் கையாண்டு ஏற்பட்ட காயங்கள் மற்றும் மிதி வெடிகள் வெடிக்கும் போது ஏற்பட்ட காயங்கள் போன்ற வற்றால் இங்கு அதிகளவான காயங்களும், எரிகாயங்களும் ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

முக்கியமாக ஒன்றைக் கூற விரும்புகின்றேன். வன்னியில் உள்ள பெரிய ஒரு வைத்திய சாலையாக இருக்கும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நிறையக் குறைபாடுகள் உள்ளன. அதிலும் முக்கியமாக பிரதானமாக இரண்டு கருவிகள் இல்லாமல் உள்ளது.

ஒன்று மயக்க மருந்து கொடுக்கும் இயந்திரம் இங்கு இல்லை. இதனால் என்னைப் போன்ற பல நிபுணர்கள் இங்கு வரும்போது பல சிகிச்சைகள் மேற்கொள்வதற்கு இடையூறாக இருக்கின்றது.

அது போன்றே 'டொனிக்' என்ற கருவி உள்ளது.அதுவும் மிகவும் பிரதானமானது. அவை இருந்தால் பல சிகிச்சைகளை இலகுவாக மேற்கொள்ள முடியும். அவை அவசியமாக இவ்வைத்திய சாலைக்கு வழங்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

மற்றும் பொதுவாக எனக்குப் பிடித்த விடயம் வைத்தியசாலை சூழல், மற்றும் வைத்தியர்களுடைய ஒத்துழைப்பு தங்குமிட வசதி, இங்குள்ள சோறும் கறியும் மிகவும் பிடித்துள்ளது. அதுதான் என்னை இவ்வளவு தூரம் நின்று சேவை செய்யக் கூடிய அளவிற்கு செய்திருக்கின்றது.

நான் நினைத்து வந்ததற்கு அப்பால் இந்த இடம் மிகவும் ஒரு வித்தியாசமான இடமாகவும், வித்தியாசமான அனுபவங்களையும் தான் பெற முடிந்தது. நான் இயன்றளவிற்கு வன்னிப் பகுதியிலுள்ள பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து நோயாளர்களுக்கும் அச்சிகிச்சையினை மேற் கொள்வதில் முழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுத்தான் மீண்டும் செல்வேன்." என்று அவர் தனது நீண்ட உரையாடலில் குறிப்பிட்டுள்ளார்.

●●●

# வெளிநாட்டு நிவாரணப் பொருட்கள் பயனற்றவை; கதிர்காமரின் கூற்றுக்கு ஐ.தே.க.கண்டனம்

சுனாமிப்பேரலை நிவாரணங்களாக வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்பட்ட பொருட்கள் பயனற்றவை என வெளி நாட்டமைச்சர் லண்டனில் தெரிவித்த கருத்தினை வன்மையாகக் கண்டிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கின்றது.

நேற்று முன்தினம் எதிர்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத்தெரிவித்த கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜி.எல.பீரிஸ் இதனைக் கண்டித்தார். சுனாமி நிவாரணமாக வெளி நாடுகளிலிருந்து எந்தவித நிதி உதவியும் கிடைக்கவில்லை என சனாதிபதி கடந்தவாரம் வெளியிட்டிருந்தார். இதனையடுத்து வெளிநாட்டமைச்சர் இவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதுபோன்ற பொறுப்பற்ற பேச்சுக்கள் மக்களுக்கும் நாட்டிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும்

எனவே ஏற்படக்கூடிய பாதிப்பைத் தடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக கிடைக்கப்பெற்ற நிவாரணங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டு மென அவர் கேட்டுக்கொண்டார்.

சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் அரசாங்கம் தோல்வியடைந்திருப்பதால் இதுபோன்ற பொறுப்பற்ற அறிக்கைகளை வெளியிட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை சனாதிபதி நிதியம் எவருடையதும் தனிப்பட்ட சொத்து அல்ல.அது இந்த நாட்டு மக்களுடையது. அதன் நிதி நடவடிக்கைகளை அறிந்து கொள்வது மக்களுடைய உரிமை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சனாதிபதி நிதியம் தொடர்பில் வெளியாகியுள்ள கணக்காய்வு அறிக்கைகளில் பல மில்லியன் ரூபாய்களுக்கு என்ன நடந்தது என்பது தெளிவுபடுத்தப்படவில்லை

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் உரிய நிவாரணங்களை வழங்காமையை அடுத்து அவர்கள் 100 மீற்றருககு உட்பட்ட தமது பழைய இடங்களுக்குச் சென்று குடியேறுகின்றனர். இதன்போது அரசாங்கத்துக்கு ஆதரவாளர்களாக இருப்போருக்கு எவ்வித பிரச்சினைகளும் இல்லை. எனினும் ஏனையோர் படையினரைக்கொண்டு விரட்டியடிக்கப்படுகின்றனர்

எனவே இது தொடர்பில் மக்களுக்குப் பொறுப்பு கூறப்படவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். சாவசன வாக்கெடுப்பு என்பது தனியொருவரின் விருப்பத்துக்கு ஏற்ப இடம்பெறும் செயற்பாடாகும். ஜே.வி.பி யின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச சர்வஜன வாக்கெடுப்பை ஒரு ஏமாற்று வித்தை என இரண்டு வருடத்திற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.எனினும் தற்சமயம் அரசாங்கத்தில் இணைந்திருக்கும் அந்தக்கட்சி சர்வசன வாக்கெடுப்பு தொடர்பில் உண்மை நிலைப்பாட்டை வெளியிடவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். (32)

# நாடுமுழுவதும் 4389 சிறு கைத் தொழில்கள் ஆழிப்பேரலையால் பாதிப்பு

## கைத்தொழில்துறை அமைச்சு தெரிவிப்பு

ஆழிப்பேரலை காரணமாக நாடு முழவதும் 4389 சிறிய கைத்தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் வடக்கு கிழக்கில் மாத்திரம் 1417 கைத் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக சிறு கைத் தொழில்துறை அமைச்சு தெரிவித்துள்ளது

அம்பாறையில் 549 சிறு கைத்தொழில்களும் மட்டக்களப்பில் 303 சிறு கைத்தொழில்களும் யாழ்ப்பாணத்தில் 76 சிறு கைத்தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் 204 சிறு கைத்தொழில்களும் திருகோணமலையில் 285 சிறு கைத்தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் தரவு ஒன்று தெரிவிக்கிறது.இதில் புடவை மற்றும் ஆடை அணிகள் கைத்தொழில்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. அதன் தொகை 962 ஆகும்.

இதேவேளை ஆழிப்பேரலை தாக்கத்தின் போது குறிப்பிட்டகைத்தொழில் ஸ்தலங்களில் பணியாற்றிக் கொண்டிருந்த 154 பேர் வரை பலியாகினர்.

இவர்களில் யாழ்ப்பாணத்தில் நான்கு பேரும் முல்லைத்தீவில் 17 பேரும் திருகோணமலையில் 22 பேரும் பலியாகினர்.

அம்பாறையில் பத்து பேர் பலியாகினர்

காலியில் 44 பேர் பலியான அதேநேரம் மாத்தறையில் மாத்திரம் 38 பேர் பலியாகினர் என்ற தகவலும் அமைச்சின் தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த நிலையில் பாதிக்கப்பட்ட குறிப்பிட்ட சிறு கைத்தொழில்களை புனரமைக்க 116 கோடியே 9 இலட்சத்து 97 ஆயிரத்து 939 ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

# பகிரங்க அறிவித்தல்

2000ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 32ஆம், 33ஆம் பிரிவுகளின் படி கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் அவர்களின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் நெற் காணியை மேட்டுக்காணியாக மாற்றுதல் தண்டனைக்குரிய குற்றமாகும். மறு அறிவித்தல் வரை வயற் காணியை மேட்டுக்காணியாக மாற்றுவதற்கான அனுமதி வழங்கல் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் அவர்களால் நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் அனுமதி கிடைக்கும் வரை வயற்காணியை மேட்டுக்காணியாக மாற்றும் செயற்பாட்டை நிறுத்துமாறு பொது மக்கள் வேண்டப்படுகின்றார்கள்.

உதவி ஆணையாளர்,
கமநல அபிவிருத்தித்திணைக்களம்,
கிளிநொச்சி.

(5882)

# அரசியல் விவாதங்களுக்கு இது தருணமல்ல புனரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குக!

## — ட்ரான் பரன்சி இன்ரநசனல் வலியுறுத்து

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு மூன்று மாதங்கள் நிறைவடையும் நிலையில் புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் அவசியம் என ட்ரான்பரன்சி இன்ரநசனலின் இலங்கைக் கிளை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜேசி வெலியமுன வெளியிட்டுள்ளார்.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கம் தற்சமயம் இவ் விடயம் குறித்து உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

அரசியல் விவாதங்களை நடத்திக்கொண்டிருப்பதற்கு இது தருணமல்ல. அது நாட்டின் அபிவிருத்தியைப் பாதிக்கும் எனவே அரசியல்வாதிகள் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் செயற்றிட்டங்களை முன்னெடுக்க முன்வர வேண்டும் என வெலியமுன கேட்டுள்ளார். இந்தப் புனரமைப்பு நடவடிக்கைகளின்போது ஊழல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றன.

ஊடகங்கள் இது தொடர்பாக செய்திகளை வெளியிட்டு வருகின்றன. சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான முழுமையான விபரங்களும் இதுவரை வெளியிடப்படவில்லை.

இது மக்கள் மத்தியில் ஊழல் சந்தேகங்களை ஏற்படுத்த முடியும் அதேநேரம் சர்வதேச சமூகமும் சுனாமியின் பின்னரான புனரமைப்புகளுக்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தோல்வி கண்டுள்ளதாக தெரிவித்துள்ள வெலியமுன, உதவி வழங்கும் நாடுகளும் பொதுமக்களின் பங்களிப்பை இதில் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கோரியுள்ளார். (32)

# சிறிலங்கா ராணுவ ஆட்சேர்ப்பிற்கான கால எல்லை மேலும் ஒருவாரம் நீடிப்பு


(வவுனியா செய்தியாளர்)

சிறிலங்கா இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திகதி மேலும் ஒரு வார காலம்நீடிக்கப்பட்டுள்ளதாக இராணுவ நடவடிக்கை தலைமைச் செயலக அதிகாரி தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டில் சிறிலங்கா இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான முதலாம் கட்ட நடவடிக்கை இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் தென்பகுதியில் உள்ள சகல பிரதேச செயலகங்களிலும், இராணுவ முகாம்களிலும், இராணுவ நடவடிக்கைத் தலைமைச் செயலகத்திலும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அரசாங்கம் எதிர்பார்த்த அளவு புதியவர்கள் இராணுவத்தில் சேர்ந்து கொள்ள முன் வராமையால் நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்திருந்த இராணுவ ஆட்சேர்ப்பு மேலும் ஒரு வார காலம் நீடிக்கப்பட்டு இம் மாதம் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக இராணுவ நடவடிக்கைத் தலைமைச் செயலக அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (10)

# ஆழிப்பேரலையில் 90 ஆம் நாள் நீங்காத நினைவில்





**செல்வன் இராசன் சுதன்** — **செல்வி இராசன் சுரிதா**

(மாணவன் வெற்றிலைக்கேணி ம.வி.)

தோற்றம் 20.07.1998 மறைவு:-26.12.2004 தோற்றம் 15.08.2003

எங்கள் இளந்தளிர்களே!
நத்தார் பண்டிகையின் குதூகலம் குறையுமுன்னே
காணாமல் போன்ரே ஆழிப் பேரலையில்
நாட்கள் தொண்ணூறு நகர்ந்து சென்ற போதும்
உங்கள் உதிர்வால் நாம் உருக்குலைந்து நிற்கின்றோம்.

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

*இவர்களுடன் ஆழிப்பேரலையின் கோரப்பிடியில் சிக்கி உயிர் துறந்த எமது இனிய உறவுகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.*

*என்றும் உங்கள் நினைவுடன்...*

அப்பா-இராசன் (ஏறாவூர், ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு)
அம்மா- மேரிபுஸ்பராணி (வெற்றிலைக் கேணி முள்ளியவளை)
அண்ணா- சுமன்
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.)

த.முகவரி:
மீள்குடியேற்றத்திட்டம்,
நலன்புரி நிலையம்,
கல்லாறு,
பிரமந்தனாறு,
விசுவமடு.

(5868)

# 91 ஆம் நாள் நீங்காத நினைவலைகள்



**செ.திலக்** — அன்னை மடியில் 01.05.1999

**செ.ஜீவராணி** — அன்னை மடியில் 30.05.1975

**அலையின் பிடியில் 26.12.2004**

இல்லாளின் சிறப்புணர்த்தி
இதமான வாழ்வளித்து
ஈரிரண்டு குணமதனை
இங்கித மாய் கொண்டவளே

மனையது சிறப்புணர்ந்து
மன்னவன் பெருமை ஓங்க
மக்களைக் காத்த விதம்
மறக்குமோ எம் இதயம்

ஆழியின் கோரப் பசிக்கு
அகப்பட்ட ஜீவாவே
அன்பு மகன் திலக்குட்டியையும்
அரவணைத்துக் கொண்டாயே
தவிக்கிறோம் நாம் இங்கே
சிறகொடிந்த பறவையாய்.

மருதங்கேணி வடக்கு
தாளையடி.

(5880)

தகவல்
மகள் (சோபி)
கணவன் (த.செல்வகுமார்)
யாழ்.மருதங்கேணி இ.த.க.பாடசாலை
மற்றும் உறவினர்கள்.

# தமிழக சிறுமிகள் கேரளாவில் விற்பனை

# தமிழகத்திற்கு பெருத்த தலை குனிவு

## டாக்டர் ராமதாஸ்

ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் தமிழகச் சிறுமிகள் கேரளா வீதிகளில் விற்பனை செய்யப்பட்டிருப்பது தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ள பெருத்த தலைகுனிவு என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:


தமிழக வரலாற்றில் ஒரு கறுப்பு அத்தியாயம் இருக்கிறது. அமெரிக்க நாட்டில் ஒரு காலத்தில் கறுப்பு இன பெண்களும், சிறுவர்களும் வீட்டு வேலைக்காக விற்கப்பட்டார்கள். பெரு முயற்சிக்குப் பின் இந்த வியாபாரம் ஒழிக்கப்பட்டது. அங்கு ஒழிக்கப்பட்டு ஒரு நூற்றாண்டுக்குப் பின் அந்த அடிமை வியாபாரம் தமிழகத்தில் தலை தூக்கி நிற்கிறது. வீட்டு வேலைக்காக வீதிகளில் பகிரங்கமாக ஏலம்விடப்பட்டு விற்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுபது சிறுமிகள் கேரளாவில் மீட்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்கள் சேலம், விழுப்புரம்,கடலூரைச் சேர்ந்த சிறுமிகள். இவர்களை கேரளாவுக்குக் கடத்திச் சென்று பகிரங்கமாக ஏலம் விடப்பட்டு விற்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு குடும்ப வறுமையே காணரம் எனக் கூறியுள்ளனர்.

## தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டும்! தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி

(பூந்தமல்லி)

தமிழ் மொழியை இந்தியாவின் ஆட்சி மொழியாக்க வேண்டுமென தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் ஊர்திப் பயணத்தை பூந்தமல்லி குமணன் சாவடியில் தொடக்கி வைத்துப் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழியைப் பாதுகாக்க திராவிட இயக்கங்கள் நடத்திய போராட்டங்களுக்கு இணையாக இந்த மூன்றாவது மொழிப் போர் போராட்டம் இருக்கும். இதனை ஆதரித்தே தீரவேண்டும். தூய தமிழில் பேசும் போது கேலி செய்தவர்கள் நாம் அறிமுகப்படுத்திய சொற்களையே பேசி வருகின்றனர். இது தான் நமது வெற்றி. இதனைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன் எனவும் மு.கருணாநிதி அவர்கள் தெரிவித்தார்.




சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாக நேற்று குற்றப்பத்திரிகை நகல் பெறுவதற்காக சங்கரச்சாரியார்கள் காஞ்சிபுரம் நீதிமன்றுக்குச் சென்றனர். வழக்கம் போல் குற்றப்பத்திரிகை நகல் வழங்கப்படாததைத் தொடர்ந்து அவர்கள் நீதிமன்றத்திலிருந்து வெளியேறிய காட்சி

# இந்தியாவில் சுனாமி எச்சரிக்கை மையம்

## மந்திரி கபில்சிபல்

ரூ.125 கோடியில் சுனாமி அலை எச்சரிக்கை கருவி நிறுவப்படும் அண்டை நாடுகளுக்கு இலவசமாகத் தகவல் பரிமாற்றம் செய்யப்படும் என்று மாநிலங்களவையில் மந்திரி கபில்சிபல் கூறினார்.

இந்தியாவில் கடந்த டிசம்பர் மாத் தாக்கிய சுனாமி அலை பேரழிவில் ஆயிரக்கணக்கானவர்கள் இறந்தனர். அது பற்றி மாநிலங்களவையில் கேட்கப்பட்ட கேள்விக்கு கடல் அபிவிருத்தி மந்திரி கபில்சிபல் கூறியதாவது;

இந்தியாவை மீண்டும் சுனாமி அலை தாக்க முன்னதாக எச்சரிக்கை விடுவதற்கு இந்திய கடற்கரையில் சுனாமிஅலை எச்சரிக்கைக் கருவி நிறுவப்படும். அதற்காக ரூ.125 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதை நிறுவுவதற்கு இந்தியாவில் போதிய நிபுணர்கள் இருக்கிறார்கள். உலக வங்கி உட்பட எந்த நிதி அமைபபின் உதவியும் தேவையில்லை. போதிய மனித சக்தி இருக்கிறது. அண்டை நாடுகள் ஒத்துழைப்புப் பெற்று இலவசமாகத் தகவல்களைப்பரிமாறி மேற்கொள்வோம். ஜப்பானில் சுனாமி அலை எச்சரிக்கை கருவியுள்ளது. அதைவிட சக்தி வாய்ந்த கருவி இந்தியக் கடற்கரையில் நிறுவப்படும். ஜப்பானில் உள்ள கருவி அடிக்கடி பொய்த் தகவலை வெளியிட்டு மக்களை பீதியடையச் செய்கிறது. அந்த நாட்டில் 60 சதவீத எச்சரிக்கை தவறாகிவிடுகிறது.

மேலும், கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி சுனாமி அலை தாக்கியதால் இந்தியாவின் பூகோள அமைப்பில் பெரிய மாற்றம் இல்லை. ஆனால் அந்தமான்-நிக்கோபார் தீவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்றார்.

# உத்தரப்பிரதேசத்தில் பயிற்சிப்பள்ளி!

# காங். உறுப்பினர்களுக்கு ராகுல்காந்தி பயிற்சி

(புதுடில்லி)

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்திலே காங்கிரஸ் கட்சித் தொண்டர்களுக்கான பயிற்சிப்பள்ளி ஒன்றை இம்மாநில அமேதி தொகுதியில் ராகுல்காந்தி தொடங்கி வைக்க முடிவு செய்துள்ளார். இப்பள்ளியில் அனைத்துக்காங்கிரஸ் கட்சித்தொண்டர்களுக்கான பயிற்சிகளை ராகுல்காந்தியே வழங்கவுள்ளார்.

இந்தியாவில் அதிக சட்ட சபைத் தொகுதிகளைக் கொண்ட மாநிலம் உத்தரப்பிரதேசம். இங்கு காங்கிரஸ் கட்சியின் பலம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இதைச் சீரமைக்க காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி முடிவெடுத்திருக்கிறார்.

இந்தப் பணியில் தனது மகன் ராகுல்காந்தியை அவர் களம் இறக்கி இருக்கிறார். ராகுல் உத்தரப்பிரதேச மாநிலம் அமேதி தொகுதியில் போட்டியிட்டு சட்டசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர். தற்போது ராகுல் அடிக்கடி உத்தரப்பிரதேசம் சென்று கட்சித் தலைவர்கள், நிர்வாகிகள்,தொண்டர்கள் மற்றும் பொது மக்களைச் சந்தித்து வருகிறார். சமீபத்தில் உத்தரப்பிரதேச கட்சி நிர்வாகிகளுக்கு சித்ராகுட், கோராக்பூர்,விர்ந்தாவன் ஆகிய இடங்களில் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.இந்த முகாமில் ராகுல் கலந்துகொண்டார். அப்போது கட்சி நிர்வாகிகளின் பேச்சு, அவர்களது எதிர்கால அரசியல் திட்டங்கள் ஆகியவற்றைக் கேட்டறிந்தார். அப்போது உத்தரப்பிரதேசத்தில் செல்வாக்கு மிக்க கட்சிகளாக விளங்கும் சமாஜ்வாதி,பகுஜன் சமாஜ், பா.ஜனதா கட்சியை எதிர்த்து அரசியல் செய்யும் தன்மை காங்கிரஸ் தொண்டர்களிடம் இல்லாமல் இருப்பதைக் கண்டார். ஆனால் பயிற்சி முகாமில் கலந்துகொண்ட பிறகு அவர்களது வேலைகளில் புதிய உற்சாகம் ஏற்பட்டு இருப்பது தெரிய வந்தது. இது தொடர்பாக மக்சாசே விருது பெற்ற சமூக சேவகர் சத்தியாராட் சதுர்வேதி ஒரு அறிக்கை தயார் செய்து ராகுல் காந்தியிடம் கொடுத்தார்.

அதிலே பயிற்சி முகாம் பயனுள்ளதாக இருந்தாலும் குறுகிய நாட்களில் மட்டுமே நடக்கிறது. இதில் குறிப்பிட்ட கட்சித் தொண்டர்கள் மட்டுமே கலந்துகொள்ள முடிகிறது. எனவே நீண்டகால பயிற்சி முகாம் தேவை என்று கேட்டிருந்தார்.



# குழந்தைகளின் படைப்பாற்றலை வளர்ப்பது பெற்றோரின் கடமை!

## அப்துல் கலாம்

குழந்தைகளின் படைப்பாற்றலை வளர்க்க அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டியது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் கடமை என்று குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் செவ்வாய்க்கிழமை சர்வதேச குழந்தைகள் ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளித்து உரையாற்றிய போதே குடியரசுத் தலைவர் இதனைத் கூறியுள்ளார். முந்தைய நூற்றாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினால் தான் இன்றைய மனித சமுதாயம் அறிவியல் தொழில்நுட்பத் துறையில் மேம்பாடு அடைந்துள்ளது.

விடா முயற்சியும் படைப்பாற்றலுமே வெற்றிக்கு வழிவகுக்கும். தொடர்ந்து முயற்சி செய்தால் பிரச்சினைகளை வென்று குறிக்கோளை எட்டலாம் என்று அப்துல்க லாம் தெரிவித்தார்.


# Job Opening Female translator

## (Tamil- English - Tamil)

**Medecins bu Monde -France**
**Mallavi Hospital Project**
**Mullaitivu District**

Seeking Female translator (tamil to English to Tamil )For Help with the medecins du monde France (International NGO) project at the mallavi hospital in mallavi ,mullaitivu Distrct.the translator will work primarily with the midwife but would also help the rest of our medical team. opening immediately. please send CV and bio data to christi Denton, c/o MDM, Mallavi Hospital, Mallavi.

(5884)



# விண்ணப்பம் கோரல்

REEDO **நிறுவனம்** ODW **செயற்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிநிலைகளுக்கு விண்ணப்பம் கோருகிறது.**

* **1. சமூகத் தொண்டர்கள் - 45** * **2. விஞ்ஞான ஆசிரியர் - 01 (கனகராயன்குளம் வளநிலையம்)**
* **3. கணக்காளர் - 02 (தலைமைப்பணிமனை)**

**தகைமைகள்:-**

**1. சமூகத் தொண்டர்கள்:-**

- ☐ கா.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சித்தி
- ☐ சமூக சேவையில் ஆர்வம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- ☐ கிளி,முல்லையில் வசிப்பிடத்தை கொண்டவர்கள் விரும்பத்தக்கது
- ☐ ஆண்,பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
- ☐ வயதெல்லை (18 - 35)

**2. விஞ்ஞான ஆசிரியர்:-**

- ☐ க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தி (உயிரியல் விஞ்ஞானம்)
- ☐ குறைந்தது இரண்டு வருட கற்பித்தல் அனுபவம் இருத்தல் வேண்டும்.
- ☐ கனகராயன்குளப் பிரதேசத்தில் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- ☐ கிளி,முல்லையில் வசிப்பிடத்தை கொண்டவர்கள் விரும்பத்தக்கது.
- ☐ ஆண்,பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
- ☐ வயதெல்லை (20 - 35)

**3. கணக்காளர்:-**

- ☐ க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தி (வணிகப்பிரிவில்)
- ☐ கிளிநொச்சி மாவட்டத்தை வசிப்பிடமாக இருத்தல் வேண்டும்.
- ☐ வயதெல்லை (18 - 30)
- ☐ அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

*சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்*

விண்ணப்ப முடிவுத்திகதி :- 10.04.2005
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:- **திட்டமுகாமையாளர்,**
ODW **செயல்த்திட்டம்,** REERDO **டிப்போ வீதி, கனகபுரம்**

(5885)

# யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை நடாத்தும் கால்பந்துப் போட்டியின் நேற்று முன்தின முடிவு

எல்லைப் படை மாவீரர் நினைவாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடாத்தி வரும் சுற்றுப்போட்டியில் நேற்று முன்தின ஆட்டங்களில் சென்மேரிஸ் வி. கழகமும், சிவானந்தா விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகமும், யாழ். லீக்கைச் சேர்ந்த சென்மேரிஸ் வி.கழகமும் மோதிக்கொண்டன.

இதில் சென் மேரிஸ் வி.கழகம் 2- 1 என்ற கோல் கணக்கில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது.

இரண்டாவது ஆட்டத்தில் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த சிவானந்தா விளையாட்டுக்கழகமும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த கண்ணகி வி.கழகமும் மோதிக்கொண்டன.

ஆட்டம் முடிவடையும்போது இரு அணிகளும் தலா இரண்டு கோல்கள் பெற்ற நிலையில் ஆட்டம் சமனாக முடிவடைந்தது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக சமநிலை உடைப்பு உதைகள் தலா ஐந்து வழங்கப்பட்டன. இதில் 2 - 1 என்ற கணக்கில் சிவானந்தா வி.கழகம் கோல்களைப் பெற்றது.

ஆட்ட முடிவில் சிவானந்தா விளையாட்டுக் கழகம் 4 - 3 என்ற கோல் கணக்கில் கண்ணகி விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது. (41)

# கிளிநொச்சி மாவட்ட கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி; மத்தியகல்லூரி அணி சம்பியன்


கிளிநொச்சி மத்தியகல்லூரி மாணவர்களுக்கும், கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவர்களுக்குமிடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒன்று கடந்த புதனன்று கிளிநொச்சி


கிளிநொச்சி மத்தியகல்லூரி அணி

மத்தியகல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

கிளி.மத்தியகல்லூரி பதில் அதிபர் சிறிதரன் தலைமையில் நடைபெற்ற போட்டி மாலை 2.30 மணியளவில் ஆரம்பமானது. தமிழீழ தேசியக்கொடியினை பிரதிக்கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் ஏற்றிவைத்தார். நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கிளி.இந்துக்கல்லூரி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 20.4 ஓவரில் 71 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தனர். 72 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களம் இறங்கிய கிளி. மத்தியகல்லூரி அணியினர் 19.2 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தனர்.

இப்போட்டியின் சிறந்த சகலதுறை வீரராக கிளி.மத்திய கல்லூரி மாணவன் வசந்ததீபனும், சிறந்த பந்து வீச்சாளராக கிளி.இந்துக்கல்லூரி மாணவன் வினோரூபனும், சிறந்த துடுப்பாட்ட


கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி

வீரரான கிளி.இந்துக்கல்லூரி மாணவன் நிஷாந்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து வெற்றிபெற்ற அணிகளுக்கான கேடயங்கள் வழங்கப்பட்டன. வெற்றி பெற்ற மத்தியகல்லூரி மாணவர்களுக்கான கேடயத்தினை பிரதிக்கல்விப்பணிப்பாளர் பத்மநாதன் வழங்கிக்கௌரவித்தார்.

அடுத்து இரண்டாம் இடத்தை வகித்த கிளி.இந்துக்கல்லூரி மாணவர்களிற்கு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா கேடயத்தை வழங்கி கௌரவித்தார்.

(கு)

# யாழ்.மாவட்ட வி.துறை நடாத்தும் இன்றைய கால்பந்துப் போட்டிகள்

எல்லைப் படை மாவீரர் நினைவாகவும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விபரம் வருமாறு,

வலிகாமம் லீக்கைச் சேர்ந்த நவாலி சென் பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ். லீக்கைச் சேர்ந்த கீனஸ் விளையாட்டுக்கழகம்.

யாழ். லீக்கைச் சேர்ந்த பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த அராலி ஐக்கிய விளையாட்டுக்கழகம். (41)





பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடத்தைப் பெற்ற இராமநாதபுரம் மேற்கு அரசினர் வித்தியாலய மாணவிகள். (படம் : ரூபன்)

## சிம்பாப்வேக்கு நஷ்டஈடு

கடந்த ஆண்டு சிம்பாப்வேயு டனான டெஸ்ட் போட்டி யை இங்கிலாந்து ஒத்தி வைத்து இறுதியில் ரத்துச் செய்தமைக்காக இங்கிலாந்து கிரிக்கெட் சபை சிம்பாப்வேக்கு ஒரு இலட்சத்து33 ஓஸ்ரேலிங் பவுணை செலுத்தியுள்ளது.

சிம்பாப்வேயின் டெஸ்ட் அந்தஸ்து பறிக்கப்பட்டாலும், இரு போட்டிகள் கடந்த டிசம்பரில் நடைபெற்றன. இது சரியான முடிவு என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை தலைவர் டேவிட் மார்கன் தெரி வித்துள்ளார்.

இங்கிலாந்து 2009 ஆம் ஆண்டு வரை சிம்பாப்வேயுடன் எவ்வித போட்டிகளிலும் இப்போதைக்கு பங்குபற்றாது எனினும் நான்கு டெஸ்ட் போட்டிகளுக்கும் தலா ஒரு லட்சத்து 25 ஆயிரம் பவுண் நஷ்டஈடாக வழங்கவேண்டுமென சர்வதேச கிரிக்கெட் சபை கோரியிருப்பினும் அவ்வாறு வழங்க இங்கிலாந்து மறுப்புத் தெரிவித்துள்ளது.

WOMEN'S CRICKET WORLD CUP 2005 SOUTH AFRICA

# மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட்; இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, அவுஸ். இந்தியா வெற்றி




தென்னாபிரிக்காவில் நடைபெறும் உலகக்கிண்ண மகளிர் கிரிக்கெட் தொடரில் அவுஸ்திரேலியா இங்கிலாந்து, இந்தியா, தென்னாபிரிக்கா அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இங்கிலாந்து - சிறிலங்கா அணிகளுக்கிடையிலான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து நான்கு விக்கெட்டுக்களையிழந்து 284 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணியில் எஸ். டெயிலர் 136 ஓட்டங்களைப் பெற்றார். சி. எம். எடவட்ஸ், சி.ஜே. கொனர் முறையே 63, 54 என்ற ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றனர்.

சிறிலங்கா அணி சார்பில் பி.எம். உடவத்த மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 285 என்ற வெற்றியிலக்கை நோக்கி ஆடிய சிறிலங்கா இங்கிலாந்து மகளிர் அணியின் பந்து வீச்சுக்கு முகம்



கொடுக்க முடியாது 70 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 214 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்து வீச்சில் இங்கிலாந்தின் பியர்சன் மூன்று விக்கெட்டுக்களையும், பொச், குஹா, கன ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

மேலும் ஒரு போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 50 ஓவரில் 174 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி 50 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களையிழந்து தடுமாறிய நிலையில் அலெக்ஸ் பிவிக்வெவ், கத்தரின் பிட்ஸ்படரிக் இணை சிறப்பாக ஆடி 85 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது.

பதிலுக்கு 175 என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய நியூசிலாந்து 23 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டையிழந்தது. நான்காவது இணையான றெவேக்கா, ரிப்பன் இணை 77 ஓட்டங்களைப் பெற்ற போதும், தோல்வியைத் தவிர்க்க முடியாதுபோய்விட்டது. இறுதியில் 142 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது.

அயர்லாந்து இந்திய அணிகளுக்கிடையிலான போட்டியில் இந்தியா ஒன்பது விக்கெட்டுக்களாலும், மேற்கிந்தியத்தீவுகள் - தென்னாபிரிக்க அணிகளிடையேயான போட்டியில் தென்னாபிரிக்கா ஒரு ஓட்டத்தாலும் வெற்றி பெற்றுள்ளன.

## பெங்களூர் சதம் தந்தைக்கு அர்ப்பணம்




நூறாவது போட்டியில் அடித்த சதத்தை அப்பாவுக்கு அர்ப்பணிப்பதாக பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் மகிழ்ச்சியுடன் கூறினார். போட்டி முடிந்ததும் இவர் அளித்த பேட்டி;

கொல்கத்தா போட்டியில் செய்த தவறை மீண்டும் செய்ய மாட்டோம் இம்முறை 500 ஓட்டங்களுக்கும் கூடுதலாக எடுக்க முழுமையாக முயற்சி செய்வோம். இரண்டு விக்கெட் இழப்புக்கு ஏழு ஓட்டங்கள் என்ற இக்கட்டான நிலையில் களமிறங்க நேர்ந்தது. அதிக வெப்பம் நெருக்கடி காரணமாக துடுப்பாடுவது கடினமாக இருந்தது. உடற்பயிற்சி நிபுணர் ஆலோசனைப்படி களைப்பை போக்க மாத்திரைகளை உட்கொண்டேன்.

இறுதியில் சிறப்பாக விளையாடி சதத்தை (184) எட்டியது மகிழ்ச்சி தந்தது. நூறாவது போட்டியில் அடித்த சதத்தை எனது அப்பா இன் தசாம்-உல்-ஹக் கிற்கு அர்ப்பணிக்கிறேன்( இவர் மகனின் சாதனையைக்காண பெங்களூர் வந்துள்ளார்)ஆடுகளம் துடுப்பாட்டம் செய்ய சாதகமாக இருந்தது.

பந்து வீச்சாளர்களின் நிலைதான் பரிதாபம். மூன்றாம் நாளில் இருந்து ஸ்பின் எடுபடுமென நினைக்கிறேன் என்னைக் காட்டிலும் யூனிஸ்ஹான் சிறப்பாக செயற்பட்டார். களத்தில் ஹர்பஜன், யூனிஸ்ஹான் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தைத் பெரிது படுத்த வேண்டிய அவசியமில்லை. இவர்கள் சாதாரணமாகத்தான் பேசிக் கொண்டார்கள் இவ்வாறு இன்சமாம் கூறினார்.

# யூனிஸ்ஹான் இரட்டைச் சதம் பாக். 570 ஓட்டங்கள் குவிப்பு



இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பெங்களூரில் நடைபெற்று வரும் மூன்றாவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்சில் 570 ஓட்டங்களைக் குவித்துதன்னைப் பலப்படுத்திக் கொண்டுள்ளது.

போட்டியின் முதல் நாளில் 323 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்கள் என்ற நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த பாகிஸ்தான் 570 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.


துடுப்பாட்டத்தில் யூனிஸ்ஹான் இரட்டைச் சதமடித்தார். அவர் 267 ஓட்டங்களைக் குவித்தார். இது இவரது முதலாவது இரட்டை சதமாகும். இன்சமாம் 184 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர்களை விட யுஹானா அதிகபட்சமாக 37 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ஹர்பஜன் ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா பத்து ஓவர் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 55 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சேவாக் 39 ஓட்டத்துடனும் கம்பீர 13 ஓட்டத்துடனும் களத்திலுள்ளனர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.



## சிந்தனைக்கு



ஈழத் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் விடுதலை வேங்கைகளாக - வீரப் புலிகளாக - மாறவேண்டும்; தாழ்ந்து போன தமிழினம் வீரப்புலி இனமாக மாறவேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 26-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## திருத்தமின்றி...!

தமிழ் மக்களின் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு சிறிலங்கா ஆட்சியாளர்கள் இணக்கப்பாடு ஒன்றிற்கு வருவார்கள் என யாராவது நம்பிக்கையுடன் செயற்படுவார்களேயானால் அவர்கள், சிறிலங்கா ஆட்சியாளர்கள் தொடர்பாகச் சரியான புரிந்துணர்வைக் கொண்டவர்களாக இருக்க முடியாது. ஏனெனில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் எவற்றின் தீர்வு தொடர்பாகவும் சிங்கள ஆட்சியாளர்கள் எப்பொழுதுமே அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாக இல்லை/ செயற்படப் போவதுமில்லை.

கடந்த சில வாரங்களாகச் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள் கட்டுமானப் பணிகள் தொடர்பாக அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்குவது குறித்த தகவல்கள் வெளிவந்தவண்ணமிருந்தன. இத்தகவல் பிரகாரம் மீள்கட்டுமானம் தொடர்பான உடன்பாடு விரைவில் ஏற்படலாம் என்ற கூற்றுக்களும், அனுமானங்களும் பெரியளவில் வெளியிடப்பட்டும் வந்தன.

இதனை வலியுறுத்துமாப் போன்று நோர்வே தரப்பும் பொதுக் கட்டமைப்பு விரைவில் உருவாக்குவதற்கான வாய்ப்பு நெருங்கிவருவதாகவும் இருதரப்புக்கிடையில் இணக்கப்பாடு விரைவில் ஏற்படும் வாய்ப்பு உண்டு எனவும் நம்பிக்கை வெளியிட்டது. நோர்வேயின் இந்நம்பிக்கைக்கு இவ்விடயத்தில் விடுதலைப்புலிகள் அளித்த வாக்குறுதி அடிப்படையாக இருந்துள்ளது.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுதல் என்ற யோசனை தொடர்பில் விடுதலைப்புலிகள் இயக்கமே முதலில் ஒரு திட்ட வரைவை முன்வைத்தது. ஆனால் அத்திட்டவரைவு சிறிலங்கா அரசாங்கத்தரப்பால் ஏற்றுக் கொள்ளப்படாமையால் இருதரப்பின் இடையேயும் சமாதான ஏற்பாட்டாளர்களாக பணி புரிந்த நோர்வே தரப்பு புதிய திட்டமொன்றை முன்வைத்தது.

இத்திட்டவரைவு தமது எதிர்பார்க்கையைவிடக் குறைந்தளவினதாக இருந்த போதும் விடுதலைப்புலிகள் தரப்பில் இத்திட்டவரைபிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதாவது மக்களின் மீள்கட்டுமானப் பணியின் அவசரமும், அவசியமும் கருதி விடுதலைப்புலிகள் இயக்கம் இதற்கான ஒப்புதலை அளித்தது.

ஆனால், சிறிலங்கா ஆட்சியாளர்கள் அவ்வாறு சம்மதம் அளிக்கத் தயாராக இருக்கவில்லை. நோர்வே தரப்பு கையளித்த திட்டவரைபில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என அது கோரியது. அரசின் இக்கோரிக்கையானது திட்டவரைபை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு முற்பட்டு நிற்பதன் வெளிப்பாடு என யாராவது கருதுவார்களேயானால் அங்குதான் அவர்கள் தவறியிருக்கின்றார்கள்.

அதாவது அரசாங்கம் இத்திட்டவரைவை நிராகரிப்பதற்குப் பதில்திருத்தத்தை முன்வைத்துள்ளது. என்பதே உண்மையானதாகும். அரசாங்கத்தைப் பொறுத்து நிராகரிப்பதும் திருத்தம் முன்வைப்பது என்பதும் ஒன்றே. ஏனெனில் திருத்தம் என்பது திட்டம் நிறைவேற்றப்படாமல் போவதற்குப் போடப்படும் முட்டுக்கட்டையே. அத்தோடு அரசாங்கம் நிராகரிக்காமல் திருத்தம் கோரியமைக்கும் காரணம் இல்லாமல் இல்லை.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் சிறிலங்கா அரசாங்கம் சுனாமி அனர்த்த மீள்கட்டுமானம் தொடர்பான புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பான கட்டமைப்பு ஒன்றை நிராகரிக்கக் கூடிய நிலையில் இல்லை. ஏனெனில் இத்தகையதொரு கட்டமைப்பு உருவாக்கப்படுதல் வேண்டும் என்ற நிர்ப்பந்தம் சிறிலங்கா அரசு மீது உள்ளது. இந்நிலையில் நிராகரிப்பு என்பது பாதகமான விளைவுகளை எற்படுத்துவதாகவே அமையக்கூடியதாகும். ஆகையினால் திருத்தம் என்பதன் மூலம் திட்டவரைவு பரிசீலனையில் உள்ளது எனக் காட்டிக் கொள்வதே அரசின் திட்டமாகும்.

ஆனால் நோர்வே தயாரித்த திட்டவரைவை விட்டுக் கொடுப்புடன் ஏற்றுக் கொண்ட விடுதலைப்புலிகள் அரசாங்கம் மேற்கொண்ட திருத்தத்தினை பரிசீலனை இன்றி ஏற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்ப்பதற்கு இல்லை. அதற்கான காரணம் இல்லாமலும் இல்லை.

ஆதாவது ஏற்பாட்டாளர்கள் முன் வைத்த திட்டத்தில் ஒரு தரப்பால் மாற்றம் கொண்டுவரப்படுகையில் ஏற்கனவே விட்டுக்கொடுப்புடன் ஏற்றுக்கொண்ட மறுதரப்பு இதனை ஏற்றுக்கொள்ளும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

ஆகையினால் அரசாங்கம் திட்டவரைவில் திருத்தம்/மாற்றம் என்பன குறித்து பேசத் தொடங்குகின்றதெனில், திட்ட வரைவைகிடப்பில் போடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துவிட்டது என்பதே அர்த்தமாகும். ஆகையினால் அரசின் திருத்தத்துடன் விரைவில் உடன்பாடு கைச்சாத்தாகும் எனக் கூறுவதும் எழுதுவதும் அரசியல் ஞானமற்ற எதிர்பார்ப்பாகும். அடிப் படையில் சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினை விவகாரத்தில் எதனைத் திருத்தமின்றி ஏற்றுக் கொள்ளத் தயாராகிறதோ அப்பொழுதே இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒருபடிதானும் முன்னேற வாய்ப்புண்டு.

# சமாதானம் நீடிக்க விரும்பின் அரசாங்கம் இ.நி. சபையை வழங்க வேண்டும்

### - திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர்

சமாதானம் நீடித்து நிலைப்பதனை அரசாங்கம் உண்மையாகவே விரும்பின் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக அமைப்பை வழங்கி பொதுக்கட்டமைப்பை உடனடியாக உருவாக்க வேண்டும். இவ்வாறு வலியுறுத்தி திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன. எனினும் அரசாங்கம் எவ்விதமான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை

சமாதானப் பேச்சுவார்த்தையை இடைநிறுத்தி ஒன்றரை ஆண்டுகள் கழிந்து விட்டன. இருபது வருட கால போராட்டத்தில் எத்தனையோ இழப்புக்களைச் சந்தித்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு சமாதான காலத்திலும் கூட அறுபதுக்கு மேற்பட்ட போராளிகளை இழந்துள்ளது. இந்த நிலையில் இடைக்கால நிர்வாக யோசனையானது அரசாங்கத்தின் பரிசீலனையிலிருந்து முற்றாகவே விலக்கப்பட்டு விட்டதாகவே தாம் கருதுவதாக மக்கள் பேரவையின் தலைவர்குறிப்பிட்டுள்ளார். ஆழிப்பேரலையின் பின்னா பொதுக்கட்டமைப்பின் அவசியத் தன்மை கருதி தமிழீழ விடுதலைப புலிகள் பல விட்டுக் கொடுப்புக்களுக்கும் உடன்பட்டு பொதுக் கட்டமைப்பு மீதான தமது பற்றுதலை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் ஜே.வி.பி. ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் , சிங்கள பேரினவாத சக்திகளின் அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து சனாதிபதி பொதுக் கட்டமைப்புப் பற்றி தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்த தயங்குகிறார்.

இதேவேளை சிறிலங்கா தேசத்தில் தொடர்ந்து அமைதி நிலைப்பதனை சனாதிபதியும், அரசாங்கமும் விரும்பினால் உதட்டளவில் பேசுவதனை நிறுத்தி விட்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் கேட்டுள்ளார்.

# சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து ஆளும் கட்சிக்குள் ஒருமித்த நிலையில்லை

### மலையக மக்கள் முன்னணி தெரிவிப்பு

சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பில் ஆளும் கட்சிக்குள்ளேயே ஒருமித்த கருத்து ஏற்படாமை பாரிய பிரச்சினையாகும் என மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது. ஜே வி பியைக் காரணம் காட்டி சமாதான முன்னெடுப்புகளை அரசாங்கம் பின்னடித்து வருகிறது.

இந்த நிலையில் ஊவா மாகாண சபையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சம்பவம் அரசாங்கத்தின் முரண்பாட்டு நிலையைத் தெளிவாக்கியுள்ளதாக மாகாண சபையின் உறுப்பினர் அரவிந்தக் குமார் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாண சபையின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரால் நாட்டின் சமாதான முன்னெடுப்பு உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை ஒன்று முன்மொழியப்பட்டது. இதனையடுத்து இதில் சில திருத்தங்கள் ஆளும் தரப்பின் ஆலோசனையின்படி மேற்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. இதன்போது ஆளும் தரப்பின் முதலமைச்சர் உட்பட சிலர் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். அதே நேரம் ஆளும் தரப்பில் 11 பேர் முதலமைச்சரின் தரப்புக்கு எதிராகவும், பிரேரணைக் கெதிராகவும் ஜே.வி.பியுடன் இணைந்து வாக்களித்தனர். இதனையடுத்து ஊவா மாகாண ஆளும் கட்சிக்குள் முரண்பாட்டு நிலைமை தோன்றியுள்ளது என அவர் மேலும் கூறினார்.

# மலையக மக்கள் மத்தியில் தரமற்ற கோதுமை மா விநியோகம்

மலையக மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. பிரிமா மாவுக்குப் பதிலாக கொரியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா தற்சமயம் மலையகப் பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்களினால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. எனினும் இந்தக் கோதுமை மாவைக் கொண்டு எவ்வித உணவுப்பொருட்களையும் தயாரிக்க முடியவில்லை என மலையக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். அதேநேரம் வெதுப்பக உரிமையாளர்களும் இதே கருத்தை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் கருத்துரைக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேலியரம்புக்வல கோதுமை மா மற்றும் தேங்காய்களின் விலை அதிகரிப்பானது தோட்டத் தொழிலாளர்களைப் பாதிக்கின்ற விடயமாகும். இவ்வாறான நிலையை தோட்டத் தொழிலாளர்கள் மீது சுமத்துவதன் மூலம் அரசாங்கம் அவர்களுக்குத் தீங்கு இழைக்கிறது.

இதற்கு அப்பால் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலைமையை மலையக தலைமைகள் புரிந்துக்கொள்வது அவசியம் என அவர் தெரிவித்துள்ளார். நுகர்வோர் துறை அமைச்சரின் கூற்றுப்படி கோதுமைமாவில் விலையேற்றம் ஏற் படின் மக்கள் நேரடியாக நீதிமன்றத் திற்குச் செல்லலாம் எனினும் தரமற்ற கோதுமை மா விநியோகம் செய்வ தென்றால் அதற்காக நுகர்வோர் துறை அமைச்சு ஒன்று அவசியமில்லை எனக் குறிப்பிட்டார்.

# இஸ்லாமிய அறிஞர் நாடுகடத்தலுக்கு எதிராக அம்பாறையில் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாட்டைச் சேர்ந்த இஸ்லாமிய மார்க்க அறிஞர் பி.ஜெய்னுலாப்டீன் சிறிலங்காவிலிருந்து நாடுகடத்தப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து நேற்று அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கல்முனைக்குடி முஸ்லிம் மக்கள் அமைப்பு என்ற பெயரில் அன்சார் சுன்னத்துல் முகமதியா ஜும்மா பள்ளிவாசல் முன்பாகவும் நிந்தவூர் ஜாமிஉத் தவ்ஹீத் பள்ளிவாசல் முன்பாகச் குறிப்பிட்ட பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஏற்பாட்டிலும் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் ஜும்மா ஆத் தொழுகையின் பின்பு குறிப்பிட்ட பள்ளிவாசல்கள் முன்பாகக் கூடிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மதச் சுதந்திரத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும், மனித உரிமையையும் உதாசீனம் செய்யும் நடவடிக்கை இது என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். நிந்தவூர் ஜாமிஉத் தவ்ஹீத் பள்ளிவாசல் தலைவர் எம்.எச்.மொகமது இத்ரீஸ் இது தொடர்பாக சந்திரிகாவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், மதச் சுதந்திரத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும், மனித உரிமையையும் மீறும் இந்த செயலானது சிறிலங்கா அரசாங்கம் இரு நாட்டு முஸ்லிம்களையும் அவமானப் படுத்தும் செயலாகும். இந்நிலையில் அரசாங்கம் இரு நாட்டு முஸ்லிம்களிடமும் மன்னிப்புக் கோரவேண்டும். நாடுகடத்தப்பட்ட அறிஞரை மீண்டும் இலங்கைக்குவர ஆவண செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் மீது சக பெண் உத்தியோகத்தர் தாக்கு

கட்டுகஸ் தோட்ட பொலிஸ் நிலையத்தில் கடமைபுரியும் ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சக பெண் பொலிஸ் உத்தியோகத்தரினால் கடுமையாகத்தாக்கப்பட்டுக் காயமடைந்துள்ளார். தாக்குதலுக்குள்ளான ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் தற்போது அங்கும்பர அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சைபெற்று வருகின்றார். இவ்வாறு தாக்கப்பட்டமைக்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை. தற்போது இது தொடர்பான விரசாணை நடைபெற்று வருகின்றது.

# கர்நாடக மாநிலச் சிறையில் வாடும் தமிழர்களை விடுவிக்கக் கோரிக்கை

## -கர்நாடக முதல்வரிடம் வை.கோ விடுத்தார்

கர்நாடக மாநிலச் சிறையில் தக்க விசாரணைகள் எதுவும் இன்றியுள்ள தமிழர்களை அந்த மாநில அரசு விசாரணை செய்து விடுதலை செய்ய வேண்டுமென ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோ கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது கட்சி எம்.பிக்கள் மற்றும் தலைவர்களுடன் கர்நாடக முதலமைச்சர் தரம் சிங்கை நேற்று முன்தினம் பெங்களூரில் சந்தித்த போதே இவ்வாறு கூறினார்.

மேற்படி சிறையில் வாடுவோரில் பதின்மூன்று பேர் 2002 ஆம் ஆண்டு தமிழ்த்தீவிரவாதிகள் எனக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப் பட்டவர்கள் எனவும் இவர்களில் கல்லூரிப்பேராசிரியரும், திராவிட சிந்தனையாளருமான நெடுஞ்செழியன் மற்றும் நூலாசிரியர் குணா ஆகியவர்கள் முக்கியமானவர்களெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக விசாரணை இன்றி கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டுள்ளமை அநீதி எனவும் அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டுமென தரம்சிங்கிற்கு அளித்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

-புளியம்பொக்கணை ஆலயச்சூழலில்-

## காணாமல் போன உந்துருளி காவல் துறையினரால் மீட்பு

(விசுவமடு)

புளியம்பொக்கணை ஆலயச் சூழலில் நேற்று முற்பகல் காணாமல் போன உந்துருளி ஒன்று மாலை கைவிடப்பட்ட நிலையில் காவல்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது பற்றித் தெரியவருவதாவது காலை 10 மணியளவில் ஆலயத்திற்கு முன்பாக ஒருவர் எம்.டி 90 ரக உந்துருளியை நிறுத்தி விட்டு ஆலயத்தில் வழிபாடுகளை முடித்துக்கொண்டு வந்து பார்த்த போது அது காணாமல் போயிருந்தது.

இதனையடுத்து ஆலயப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த உற்சவகால காவல்துறைப் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து காவல்துறையினரின் துரிததேடுதல் நடவடிக்கையின் போது திருடனால் கைவிடப்பட்ட நிலையில் உந்துருளி புளியம் பொக்கணைப் பகுதியில் காவல் துறையினரால் கண்டு பிடிக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (46)

## தண்டப்பணம் அறவீடு

வவுனியா கந்தபுரம் பகுதியில் ஏழு ஆமைகள் வைத்திருந்த ஒருவருக்கு ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா கந்தபுரம் பகுதியில் ஏழு ஆமைகள் வைத்திருந்த ஒருவரை வவுனியா பொலிசார் கைது செய்து கடந்த புதன் கிழமை வவுனியா நீதவான் நீதி மன்றில் ஆஜர் செய்தனர். நீதி மன்ற விசாரணையின்போது அதே நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் வவுனியா நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் ஆயிரம் ரூபாதண்டப் பணம் அறவிட்டு குற்றவாளியை விடுதலை செய்தார். (10)

### மாற்றுக்....

இதுதொடர்பாக் கருத்து வெளியிடுகையிலே நலன்புரி அமைப்புக்களின் இணைய வட்டாரங்கள் அவ்வாறு தெரிவித்தன. குறிப்பாக வலி. வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளாகக் கூறி ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பெரும் பகுதி சிறந்த விவசாய நிலங்களாகும். அதே போன்று தென்மராட்சி தெற்குப் பகுதியில் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள மறவன் புலோ மற்றும் தனங்களப்பு போன்றவையும் நெற்பயிர் செய்கை வலயங்களாகும்.

இந் நிலையில் உரிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்காத வகையில் வெறுமனே குடியிருப்பினை மட்டுமே நோக்கமாகக் கொண்டு அரச காணிகள் வழங்கப்படுமாயின் அது பற்றி எச் சந்தர்ப்பத்திலும் சிந்திக்கக்கூடிய நிலையில் நாம் இல்லை. கடந்த 15 வருடங்களிற்கு மேலாக அகதி வாழ்வினை வாழ்ந்து கொண்டு தற்போது மாற்றிடங்களில் அவல வாழ்வை வாழ்ந்து வரும் எமக்கு இவ்வாறானதோர் தீர்வு வேண்டியதில்லை. அதற்காக இவ்வளவு காலமும் நாம் காத்திருக்கக் வேண்டியதோர் தேவையுமில்லை.

குறிப்பாகக் குடாநாட்டின் வெளியே உள்ள அரச காணிகளில் பெரும்பாலானவை மக்கள் வாழ்வதற்கான அடிப்படை வசதிகள் எதையும் கொண்டிராத தரிசு நிலங்களே இப் பகுதிகளிற்கு போதிய குடிநீர் வசதி கூட இல்லாதுள்ளது.

குறிப்பாக வடமராட்சி கிழக்கின் நாகர் கோவில் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் பலவும் பருத்தித்துறையை அண்டிய புனிதநகர் பகுதியில் குடியேற்றப்பட்டன. அரசிற்குச் சொந்தமான காணிகளில் இவர்கள் குடியேற்றப்பட்ட போதும் அப்பகுதி அம் மக்கள் தொடர்ந்து வாழ்வதற்கான எந்தவொரு அடிப்படை வசதியையும் கொண்டிருக்கவில்லை. இதனால் அக்குடியேற்றத் திட்டம் வெற்றி பெறாததுடன் குடியேற்றப்பட்ட பல குடும்பங்களும் அங்கிருந்து மீண்டும் இடம்பெயர்ந்து விட்டன.

இவ்வாறானதோர் சூழலில் மாற்றிடங்களை இடம்பெயர்ந்த ஏனைய மக்களிற்கும் வழங்குவது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. எமது காணிகளை அரசு சுவீகரிக்கும் எந்தவொரு முயற்சியையும் நாம் அனுமதிக்கப் போவதில்லை. இவ்விடயத்தினில் தொடர்ந்தும் போராட நாம் தயாராக இருக்கின்றோம் என்று மேலும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.(27)

### எகிப்தின்...

இலங்கை குடிமக்கள் என்று உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் எகிப்து அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் அவர்களை இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இவ்விடயம் தொடர்பாக ஹெய்ரோவிலுள்ள சிறிலங்காத்தூதரகத்தின் ஊடாக எகிப்து அதிகாரிகளுடன் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு தொடர்ந்து தொடர்புகளை வைத்திருக்கும் என்று அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புலிகளுக்கும்....

சென்று விட்டது என்றார்.

இதேவேளை, சுனாமி நிவாரணம் மற்றும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட இருக்கும் பொதுக் கட்டமைப்பிற்கும் விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார யோசனைகளுக்கும் இடையில் எவ்வித தொடர்புகளும் இல்லை. இவை இரண்டும் முற்றிலும் வேறுபட்டது எனக்கூறிய அவர், புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகள், அதிகாரப் பரவலாக்கம் நிறைவேற்று அதிகாரங்கள், பாராளுமன்ற அதிகாரங்கள், மற்றும் நிதித்துறை அதிகாரங்கள் பற்றிப் பேசப்படும் ஒரு அரசியல் நடைமுறை.

ஆனால் சுனாமி நிவாரணக் கட்டுமானப் பணிகளுக்காக உருவாக்கப்படவிருக்கும் பொதுக் கட்டமைப்பானது அரசியல் கலப்படம் எதுவுமற்ற வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட நிர்வாக முறை மட்டுமே என்றும் அவர் கூறினார்.

விடுதலைப்புலிகளுடன் இது தொடர்பான பேச்சுக்கள் முன்னேற்றகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சர்வதேச சமூகம் விரும்புவது போல் இந்தப் பொதுக் கட்டமைப்பு விரைவில் உருவாக்கப்பட்டு விடும் எனத் தான் நம்புவதாகக் கூறிய அவர் இதற்கான கால வரையறையையும் கூற அவர் மறுத்து விட்டார்.


## பணிநிலை வேண்டுகை

ஈழநாதம் பத்திரிகை நிறுவனத்திற்கு ஒப்பு நோக்குநர், ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர் பணிநிலைகளுக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பணிநிலை:-

ஒப்பு நோக்குநர்

அகவை:- 25 இற்கு மேற்பட்டோராக இருத்தல் வேண்டும். (ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

கல்வித்தகைமை:-க.பொ.த (உ/த)பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் சித்தியடைந்தவர்களாயிருத்தல் வேண்டும். அல்லது ஓய்வு பெற்ற அலுவலர்கள் அல்லது அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது.

ஆங்கில-தமிழ் மொழி பெயர்ப்பாளர்:-


முன் அனுபவமும், அரசியல்குறித்த துறைசார்ந்த அறிவும் உடையோர் விரும்பத்தக்கது.

குறிப்பு:-உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்.

வேதனம்:- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையவர்கள் 06.04.2005 (புதன் கிழமை) காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனைக்குச் சமூகம் தரவும்.

நிர்வாகம்.


பிரான்சிலிருந்து சிறிலங்காவுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட கப்பல்

## தமிழ்நாட்டிலிருந்து மேலும் 13 அகதிகள் தாயகம் திரும்பினர்

தமிழ்நாட்டிலிருந்து மேலும் ஈழத் தமிழ் அகதிகள் 13 பேர் நேற்றுக் காலை தலைமன்னார் கரையை வந்தடைந்துள்ளார்கள்.

மணல் திட்டியொன்றில் படகோட்டிகளினால் இறக்கி விடப்பட்ட இவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் மீட்கப்பட்டு தலை மன்னார் பொலிசில் ஒப்படைக்கப்பட்டார்கள். மன்னார் மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பேரில் இவர்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். இதே வேளை யுத்த நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்பு கடல் வழியாக 3100 குடும்பங்களைச் சேர்ந்த ஈழத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பியுள்ளார்கள். இவர்களில் 1500 குடும்பங்கள் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என மன்னார் பிரதேச செயலாளர் ஆர் வரதீஸ்வரன் தகவல் வெளியிட்டுள்ளார். அவரது தகவலின்படி இவ்வருடம் பிற மாவட்டங்களைச் சேர்ந்த 16 குடும்பங்கள் உட்பட 80 குடும்பங்கள் இப்படி வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

## கடற்பெருக்குத் தொடர்பான தகவலால் தென்னிலங்கையில் பதற்றம்

கடற்பெருக்கு சம்பந்தமான தகவல் வெளியானதை அடுத்து நேற்றுத் தென்னிலங்கையின் பெரும்பாலான குடும்பங்கள் தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேறின. குறிப்பாக மாத்தறை காலி, அம்பாந்தோட்டைப் பகுதிகளில் இருந்தே இந்த மக்கள் வெளியேற்றம் இடம்பெற்றது இதன் காரணமாக அங்கு பதற்ற நிலை தோன்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை நேற்றுப் பிற்பகல் அளவில் அந்தமான் தீவுப்பகுதியில் 5.9 ரிச்டர் அளவிலான புவியதிர்வு இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. .எனினும் இது ஆழிப்பேரலையை ஏற்படுத்தும் வாய்ப்பைக் கொண்டிருக்கவில்லை எனப் புவியியல் மையம் தெரிவித்துள்ளது. ஆழிப் பேரலை அபாயம் ஏற்பட்டால் அது தொடர்பில் மக்களுக்கு அறிவிக்கப்படும் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

## கண்ணீர் அஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 30 | | 24 |
| 04 | | 03 |
| 1973 | | 2005 |



அமரர்

### சங்கரப்பிள்ளை கருணாகரன்

01 ஆம் வட்டாரம், முள்ளியவளை

(நடத்துநர்)

தமிழீழப் போக்குவரவுக் கழகம்

எம் நெஞ்சைப் பிளந்தது போல்
வந்து விழுந்த செய்தியை-எம்மால்
நம்ப முடியவில்லை
உனது புன்முறுவல் பூத்த முகத்தினிலே
ஓர்குறையும் கண்டறியோம்
என்றுமே சிரித்தவனாய்
எம்மோடு வாழ்ந்திருந்தாய்
வீதியிலே விபத்தொன்றில்
உன்னுயிர்தான் போனதுவோ!....
நிச்சயமாய் நிகழ்ந்ததென
ஓர் பொழுதும் உணரவில்லை
காலனவன் உன்னை அழைத்துவிட்டாலும்
காலத்தால் அழியாத உன் நினைவில்
என்றும் வாழ்வோம்....

24.03.2005 ஆம் நாள் அகால மரணமடைந்த எமது நிறுவன நடத்துநரான திரு.ச.கருணாகரன் அவர்களின் மறைவுச்செய்தியால் துவண்டு போயுள்ள அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆத்மசாந்திக்காக இறைவனையும் பிரார்த்திக்கின்றோம். 26.03.2005 இன்று காலை 10.00 மணிக்கு அன்னாரின் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

ஊழியர் நலன் பேணல் கழகம்,
தமிழீழப் போக்குவரவுக்கழகம்.

(சி.11585)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது